
விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN




வள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி 4 உ புதன் (18-12 68) றம்ழான் 27 புத்தகம் 23 இதழ் 10

# தமிழினத்தை ஒழித்துக் கட்ட மொரிஷியஸ் தீவிலும் சதி!

## தமிழர்கள் மீது பிரெஞ்சு திணிப்பு!!

மொரிஷியஸ் தீவிலும் தமிழினத்தை ஒழித்துக் கட்டுவதற்கு அங்குள்ள ஆங்கில அமெரிக்க பிரெஞ்சுச் சக்திகள் முனைப்புடன் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது. மொரிஷியசில் வாழும் தமிழர்களிடம் அவர்கள் விருப்பத்துக்கு மாறாக பிரெஞ்சு மொழித் திணிப்பு நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது.

மொரிஷியஸ் அண்மையில் சுதந்திரம் பெற்றது தெரிந்ததே. மொரிஷியஸ் தீவின் மக்கள் தொகையில் 68 சதவீதம் பேர்—அதாவது மூன்றில் இரண்டு பங்கினர் இந்திய வம்சாவழியினர். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.

இருந்தபோதிலும், மொரீஷியசில் வாழும ஆங்கில, அமெரிக்க, பிரெஞ்சுக்காரர்களின் சுவை கண்ட விஷக்கரங்கள், அங்குள்ள தமிழினத்தை சாய்ப்பதிலே முனைந்துள்ளனவாம்.


தமிழ்—தமிழர் வாழ்க்கை முறை—தமிழ் கலாசாரம் ஆகியவை தலைதூக்காமல் நசுக்கிவிட பல்வேறு திட்டமிட்ட சதிகள் அங்கு நடந்து வருவதாக தெரிகிறது.

மொரிஷியஸ் தமிழர்களின் எதிர்ப்பையும் புறக்கணித்துவிட்டு, அவர்களின் தலையில் பிரெஞ்சு மொழித் திணிப்பு நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

நூற்றுக்கு அறுபத்தெட்டுப பேர் உள்ள தமிழ் இனத்துக்காக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள், மொத்த வானொலி நிகழ்ச்சி நேரத்தில் ஏழு வீதம் மட்டும் தானும்.

மொரிஷியஸ் தீவில் தமிழன் பெரும்பான்மையாக இருந்தும், இந்த அவலநிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதற்கு காரணம், ஆங்கில-அமெரிக்க-பிரஞ்சு பிரசாரங்களுக்கு ஈடு கொடுக்கத் தக்க இந்திய அரசின் பிரசாரம்-தமிழில் பிரசார வாய்ப்புக்கள் - இல்லாததே என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

அண்மையில் தமிழகம் வந்திருந்த மொரிஷியஸ் அமைச்சர் ராம்நாத் ஜீடா மொரிஷியஸ் தமிழர்களின் அவல நிலை குறித்து தமிழக முதலமைச்சா அறிஞர் அண்ணுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.




## தமிழில் தொலைபேசிக் கொத்து வெளியிடுவதை நிறுத்திவிட அஞ்சல்திணைக்களம் ஆலோசனை!

தமிழ் மக்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்காததால், அடுத்த ஆண்டு முதல் தமிழில் தொலைபேசி விபரக் கொத்து வெளியிடுவதை நிறுத்தி வைப்பதற்கு அஞ்சல் திணைக்களம் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது. அதேபோல கமத்தொழில் விளக்கம் என்னும் தமிழ்சஞ்சிகைக்கும் மூடு விழா நடத்தப்படும் என்று தெரிகிறது.

தமிழில்அரசாங்கம் வெளியிடும் சஞ்சிகைகளுக்கும், நூல்களுக்கும் தமிழ் மக்கள் போதிய ஆதரவு காட்டுவதில்லையென்று அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

'தமிழர்கள் தமிழில் இது இல்லை, அது இல்லை, அங்கு தமிழ்ப் புறக்கணிப்பு; இங்கு தமிழ் ஒதுக்கப்படுகிறது என்று குறை கூறுகிறார்களே தவிர, தமிழ் மொழிக்கு அரசாங்கம் அளிக்கும் சலுகைகளை நீடித்து நிலைக்கச் செய்வதற்குபோதியமுயற்சியெடுக்கிறார்களில்லை. அரசாங்கம் தமிழில் வெளியிடும் சஞ்சிகைகளையும் படிவங்களையும் நூல்களையும் தமிழ் மக்கள் வாங்குகிறார்களில்லை. ஆங்கில நூல்களையே வாங்குகிறார்கள். இதனால் அரசாங்கம் வேறு வழியின்றியோ, அல்லது அதைச் சாட்டாகக் கொண்டோ, தமிழ்வெளியீடுகளை நிறுத்திவிட முடிவு செய்யும் நிலைக்கு தள்ளபபட்டுள்ளது'

—மேற்கண்டவாறு அரசாங்கத்தில் பதவி வகிக்கும் ஓர் உயர்தர தமிழ் அதிகாரி நமது நிருபரிடம் வருத்தத்துடன் தெரிவித்தார்.

தமிழில் தொலைபேசிக் கொத்து இந்தியாவிலேயே வெளியிடப்படாத நிலையில், இங்கு தமிழரசுக்கட்சியின்—குறிப்பாக கிளிநொச்சி

(9-ம் பக்கம் பார்க்க)

### இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்:
## டட்லியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அண்ணுவை அழைக்காததேன்?

—மதியழகன்

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் பற்றி அண்மையில் டெல்லியில் இலங்கைப் பிரதமரும் பாரதப் பிரதமருவ் நடத்தியபேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அழைக்கப்படாததற்கு தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி திரு. மதியழகன கூறியுள்ளதாவது:—

''இலங்கையில் தோட்டத் தொழிலாளராக இருப்பவர்களில்பெரும்பாலோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்; அகதிகளாகத் தாயகம் திரும்பும் அவர்களில் பல

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் வாசகர்களுக்கு ஓர் அரிய விருந்து!

பொங்கல் சிறப்பிதழிலிருந்து படைக்கப்பட விருக்கிறது!!

என்ன விருந்து? படைப்பதுயார்?
என்கிறீர்களா?
அடுத்த வாரம் வரை
பொறுத்திருங்கள்!

## இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் இலக்கிய ஏடுகள்

(சென்ற வாரத் தொடர்)

வெகுஜன சஞ்சிகைகளின் அமோக வளர்ச்சி இலக்கியப் பத்திரிகைக்காரர்களுக்குப் பயத்தை அளித்தது. இந்தப் பயம் இரண்டுவித விளைவுகளை உண்டாக்கியது. வெகுஜன சஞ்சிகைகளிலிருந்து வேறுபட்ட தரமான நல்ல இலக்கியப் பத்திரிகைகளை நடத்தவேண்டுமென்ற பிடிவாதம் சிலருக்கு உண்டாகவும், வெகுஜன சஞ்சிகைகளை ஆதரிப்போர் அந்த வழியிலேயே முற்றிலும் போய்விடவும் நேர்ந்தது. இதனால் இலக்கியத் திறனுள்ள பத்திரிகைகளில் கவனம்செலுத்துவோரும்—அத்தகைய வாசகர்களும்—தனித்தனியே தங்கள் துறைகளில் அக்கறை செலுத்தத் தொடங்கினர். தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு இந்த நிலை ஓரளவு உறுதுணை புரிவதாயிருந்தது—என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. இலக்கியத் தரமான குழு ஒன்று எழுத்துலகிலும் வாசகர் உலகிலும் உண்டாகவும் இந்த வெகுஜன ரஞ்சகமான இதழ்களே மறைமுகமான தூண்டுதல்களாக இருந்தன—என்று அநுமானிக்கலாம்.

வெகுஜனப் பத்திரிகைத் துறை ஆதிக்கம் இலக்கிய ரீதியான தனித்தன்மை, அசல் தன்மை உள்ள பத்திரிகைகளைக்கூடப் பாதிக்க நேர்ந்தது. இந்தக் காலக் கட்டத்தில் இப்படிச் சோதனையைத் தாங்கமுடியாமல் நெல்லையிலிருந்து வந்த சாந்தி, சென்னையிலிருந்து வந்த சரஸ்வதி, எழுத்து, இலக்கிய வட்டம் ஆகிய இலக்கிய ஏடுகள், பம்பாய் விந்தியா, போன்றவை சிரமப்பட்டுப் போராடின.

மலேசியாவில் மலைமகள், தின இதழ்களின் வார மலர்கள், ஈழத்தில் ஈழகேசரி, கலைச்செல்வி 'புதுமை இலக்கியம்', 'மரகதம்' போன்ற இதழ்களும் இதே காலகட்டத்தில் இலக்கியத்தரமான செயல்களைச் செய்ய முயன்றன.

'ரங்கோனில் செய்தி இதழாகப் பர்மா நாடு ஒன்று மட்டுமே இந்தச் சமயத்தில் தமிழ் ஏடாக இருந்தது. கலைமகள் காரியாலயம் வெளியிட்டு வளர்த்து வரும் மஞ்சரி, கோவைக் கலைக் கதிர், தாமரை 'தென்மொழி', போன்றவைகூட வெகுஜனக் கவர்ச்சி இதழ்களின் அளவு செல்வாக்குப் பெறமுடியவில்லை.

## தற்கால நிலைமை:—

சரஸ்வதி, இலக்கிய வட்டம்போன்ற பல இலக்கியப் பத்திரிகைகள் சோதனையைத் தாங்காது நின்றே விட்டன. எழுத்து, தாமரை ஆகிய இதழ்கள், புதுக் கவிதை, விமாசனம் ஆகிய துறைகளில் சோதனைசெய்து வருகின்றன. கலைமகள் 1950-ம் ஆண்டுக்கு முன் சிறுகதைத் துறையில்செய்த சோதனை முயற்சிகள்போல் இப்போது செய்வதில்லை.

புதிதாகத் தோன்றிய தீபம் மாத இதழ்—இலக்கிய விவாதங்கள், நாடகம், சிறு கதை பற்றி இலக்கிய ஆராய்ச்சிகள், போன்றவற்றிலும், திறனுய்விலும், தரமான சிறுகதைகளை வெளியிடுவதிலும் விறுவிறுப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. பெரும்பாலான பத்திரிகைகள் கதைகளை மட்டுமே இட்டு நிரபபுவதோடு இலக்கியப் பணி நிறைந்து விடுவதாக நினைக்கும் இந்த நாளில் புதிய சோதனைகளைச் செய்ய இலக்கியப் பத்திரிகைகள் கூடத் தயங்குகின்றன.

நாட்டின் அரசியல் பொருளாதார, சினிமா வேகங்கள்—நிதானமான போக்குள்ள பத்திரிகை அம்சங்களை ஊக்குவிக்கத் துணை செய்யவில்லை. ஒரு சினிமாப் பத்திரிகை இலக்கிய அம்சங்களில் எதுவுமே இன்றி வெளிவர முடியும் என்பது போல் ஓர் இலக்கியப் பத்திரிகை சினிமா அம்சங்கள் எதுவும் இன்றி வெளிவர முடியாது என்ருகிவிட்டது தற்கால நிலைமை.

இலக்கியத்தின் புதிய பழைய துறைகளில் ஆழ்ந்தகன்ற கவனம் செலுத்தும் பத்திரிகைகள் சிலவாவது வேண்டும். மொழியின் ஜீவாதாரமான பிரச்சினை இது. விதை நெல் சேமித்து வைத்தால்தான் மறுபடி பயிரிட முடியும். இத்தகைய இலக்கியப் பத்திரிகைகள் மொழிக்கு விதை நெல்லைப் போன்றவை. நாளைய இலக்கிய முயற்சிகளைப் பயிர் செய்ய இவை உதவுவதைப் போல வேறெவையும் உதவ மாட்டா' என்ற உணர்வு நமக்கு இருந்தாலே நல்லது.

## இலக்கிய ஏடுகளின் எதிர்காலம்:—

தமிழ் இலக்கிய இயக்கம் இப்போது வளர்முகமாக இருக்கிறது. அங்கங்கே எழுத்தாளர் சங்கங்கள், வாசகர் பேரவைகள் தோன்றிப் புதுமை இலக்கியம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க முனைந்துள்ள காலம் இது. இந்தக் காலத்திலும் எதிர்காலத்திலும் இலக்கியத் தரமான பத்திரிகைத் தொழில் கொஞ்சம் காலூன்ற வாய்ப்பிருக்கிறது. விமர்சனம், திறனய்வு, இலக்கியத்தில் சோதனை முயற்சிகள், விவாதங்கள் போன்றவற்றை நடத்தும் தீவிரமான இலக்கியக் கொள்கை உள்ள பத்திரிகைகளுக்கு எதிர்காலம் இருக்கிறது. எவ்வளவு வெகுஜனப் பத்திரிகைகள் அழுத்திலும் இலக்கியப் பத்திரிகைகள் வளர முடியும். வளர வேண்டும்.

### நா. பார்த்தசாரதி

அகநானூற்றிலோ புறநானூற்றிலோ ஒரு பாடலுக்கு விளக்கமும், நயமும் கூறினாலோ படம் வரைந்து விட்டாலோ அதுவே இலக்கியப் பத்திரிகையின் இலட்சணம் என்று கருதிய காலம் மாறி இலக்கியப் பத்திரிகையின் இலக்கிய நோக்கும் இலக்கியப் பயனும் நன்கு புரிந்துகொள்ளப்படும் காலமாக எதிர்காலம் இருக்கும்.

இலக்கியப் பத்திரிகை வளர்ச்சியில் கருத்துள்ள யாவரும் துடிப்பான இந்த எதிர்காலத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பல்லாயிரம் விதமான பத்திரிகைகள் ஒரு மொழியில் நடந்து வந்தாலும்—அந்த மொழியின் நாளைய நிதிக்குவை என்ற சேமிப்புக்குப் பொருள் வழங்குபவை இலக்கிய ஏடுகளே என்பதை நினைவு வைத்துக் கொள்ளவேண்டும். வாசகர்களில் நல்ல கூட்டம் ஒன்று வெகுஜனப் பத்திரிகைத் தரத்தில் மட்டும் திருப்தி காணுமல் இலக்கியத் தரமான பத்திரிகைகளை எதிர்பார்க்கும் எதிர்காலம் உருவாகவேண்டும்.

மொழியின் நிலைத்த சிறப்பிற்கு ஒரு காலத்தில் கவிதை இலக்கியம் எப்படி ஓர் அச்சாணியாக இருந்ததோ அப்படியே இலக்கியப் பத்திரிகைகளும் மொழிக்கு அச்சாணியாக இருக்க ஏற்றவையாகும். 'என்கௌண்டர்' (Encounter) மாடர்ன் ரெவ்யூ (Modern Review) தமிழ்க் கலை (Tamil Culture) போன்ற இதழ்கள் தமிழில் பெருகி வளர வேண்டும்.

ஒரு நல்ல இலக்கியப் பத்திரிகை பல்லாயிரம் பேருக்குக் கற்பிக்கும் பேராசிரியனைப் போன்றது. தரமான பத்திரிகைத் தொழிலுக்கு இலக்கியப்பத்திரிகைகளே முன்னோடிகளாக இருக்கமுடியும். பத்துத் தரக்குறைவான பத்திரிகைகளிலிருந்து ஒரு நல்ல விளைவும் ஏற்படமுடியாது. அதே சமயத்தில் ஒரு தரமான இலக்கியப் பத்திரிகையிலிருந்து பத்து நல்ல விளைவுகளாவது விளையமுடியும் என்று கூறி இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்.




அன்புள்ள தம்பி,
தங்கைகளே!

வணக்கம். மாணவர் அரங்கு மீண்டும் ஆரம்பமானதைக் குறித்து ஏராளமான தம்பி தங்கைகள் மகிழ்ச்சிதெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர். உங்கள் ஆர்வத்துக்கு எனது நன்றிகள்.

யாழ். மத்திய கல்லூரி தமிழ் மாணவமன்றத் தலைவர் தம்பி சுதந்திரராஜா, மாணவர் அரங்கு எழுத்துலகில் புகவிரும்பும் மாணவர்களின் பயிற்சிக்களமாக விளங்கவேண்டுமென்று எழுதியுள்ளார். அதற்காகத் தானே மாணவர் அரங்கு இடம்பெறுகிறது!

வேறு என்ன? நிறைய எழுதுங்கள். பின்னர் மீண்டும் சந்திப்போமே!

விஜயா அக்கா

### முக்கிய குறிப்பு

பின்வரும் முகவரி வெட்டியொட்டப்பட்டு மாணவர் அரங்குக்கு அனுப்பப்படும் விஷயங்களே பிரசுரமாகும். முகவரி ஒட்டப்படாத கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

வெட்டி ஒட்டப்படவேண்டிய முகவரி:

விஜயா அக்கா
மாணவர் அரங்கு
சுதந்திரன்,
த. பெ. இல. 1183
கொழும்பு.

## இவர் யார் தெரியுமா?

சுதந்திரக் கனல் அமெரிக்கபூமியில் ஆக்ரோஷமாய் பரவி நின்றவேளை, சுதந்திரப்போரில் முழுமுச்சாக ஈடுபட்டு போர் புரியும் வீரர்களுக்குக் கடுமையான வேலைகளையும் கொடுத்து வாட்டி எடுத்தனர் அதிகாரிகள்.

அப்போது, புதிய பாலம் ஒன்று நிர்மாணிக்கும் வேலை சில வீரர்களுக்கு இடப்பட்டிருந்தது. பாலவேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அதிகாரி-பாலவேலைகளுக்கும் சிறிதும் அஞ்சாத வருக—வேகும் வெயிலிலும்—தகிக்கும்தாரிலும் நின்று வீரர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வதையும் பாராது—அவர்களைக் குரூரமாக விரட்டி மி ட்டிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில்—அங்கு குதிரையில் வந்த ஒருவர அதிகாரியை நோக்கி, 'ஏன் தாங்களும் உதவலாமே?'' என்றார்.

அதிகாரி கோபமாக அவரைப் பார்த்து ''அது என் வேலை இல்லை'' என்றார், அத்தோடு— ''நீங்கள் உதவலாமே?'' என்றார் குத்தலாக.

குதிரையில் இருந்தவர் புனசிரிப்புடன்—குதிரையை விட்டிறங்கி — கஷ்டப்படும் வீரர்களுக்குக் கைகொடுத்து உதவினார். அவருடைய தயாள சிந்தையைக் கண்டு மகிழ்ந்த வீரர்களுக்கு அவர் ஒரு, ''அறிமுக அட்டை'' யை வழங்கி— ''ஐயா, இனிமேல் இப்படியான வேலை வந்தால் இந்த விலாசதாரரை அழையுங்கள்; அவர் வந்து உங்களுக்கு உதவுவார்'' என்று கூறிவிட்டு—தன் குதிரையைத் தட்டி அதில் ஏறிக்கொண்டு சென்று மறைந்தார்.

யார் இந்தக் காருண்யசீலர் என்று மருண்டனர் வீரர்கள்? இவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

சுதந்திரக் கனல் கொழுந்து விட்டெரிந்த காலத்தில் இராணுவத் தளபதியாயிருந்து—தன் திறமையால் அமெரிக்க மக்களின் இதயத்தில் கன்னல் நினைவை உண்டாக்கி — ஜனுதிபதியான ஜார்ஜ் வாஷிங்டனே!

செல்வி ந. சற்குணதேவி
சித்தன்கேணி.

### தந்திரக் கணக்கு

சரியான விடை

4.12.68 மாணவர் அரங்கில் வெளியான தந்திரக் கணக்குக்கு விடை 19 ஆடுகள்.

## உங்கள் அறிவுக்கு

பனி எப்படி உண்டாகிறது?

நீராவி திவலையாய் மாறுவதால்.

இலங்கையில் கிடைக்கும் உலோகம் எது?

கார் ஈயம்.

காட்டுத் தீ எவ்வாறு உண்டாகிறது?

மரங்கள் ஒன்ருேடு ஒன்று உராஞ்சுவதால்.

அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் யார்?

கொலம்பஸ்.

மின் மினிப் பூச்சியின் வாலில் வெளிச்சம் தெரிவதேன்?

பொஸ்பரஸ் இருப்பதால்.

[illegible] புதிய தேசத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

சிலிரொடீசி.

உலகில் மிகப் பெரிய தீவு எது?

கிறீன்லாந்து.

தென் அமெரிக்காவில் நீண்ட ஆறு எது?

அமேசன் நதி.

தொகுத்தவர்:
க. ஜெயன்.
மாதகல்.

சோம்பேறி யார்? ஒரு வேலையும் செய்யாமல் சும்மா கிடப்பவன் மட்டுமல்ல, இப்போது செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பாகப் பணி ஆற்றுவதற்குத் திறமையும் வாய்ப்பும் இருந்தும் அப்படிச் செய்யாமல் இருக்கிருனே, அவனும் சோம்பேறிதான்.

—''சாக்ரடீஸ்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. பூபாலசிங்கம்,
கைதடி வடக்கு.

கே: நீர் ஒரு சமயவாதியா அல்லது அரசியல்வாதியா?

ப: நிச்சயமாக சந்தர்ப்பவாதியல்ல!

கே: எமது சாவகச்சேரித் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் செல்வாக்கிழப்பதைக் கண்டு தனிப் பெருந்தலைவர் துக்கப்படுகிறாரா மகிழ்ச்சியடைகிறாரா?

ப: அவரது சொந்தத் தொகுதியே ஈடாட்டம் கண்டிருக்கும்போது ஏனைய தொகுதிகளைப் பற்றி அவர் ஏன் கவலைப்படுகிறார்?

ஃ

ஈழத்துமணி,
திருமலை.

கே: ஒரு கட்சியின் கட்டுப்பாட்டுக்கு இசைந்து நடக்க முடியாதவர்கள், வேறுகட்சி அமைத்தோ வேறு கட்சியில் சேர்ந்தோ வளர முடியுமா?

ப: ஒருபோதுமே முடியாது. அத்தகைய அடங்காப்பிடாரிகளால் சமூகத்துக்கும் நன்மை கிடையாது!

கே: கட்சிவிட்டு கட்சி மாறும் விலாங்குகளைப்பற்றி உங்கள் கருத்தென்ன குயுக்தியாரே?

ப: அதுதானே கூறிவிட்டீர்களே விலாங்குகள் என்று!

ஃ

நரசிம்மன்,
பதுளை.

கே: திருமறையாகிய குர்ஆனுக்கு விழாக் கொண்டாடிய இலங்கையரசு பொதுமறையாகிய திருக்குறளைக் கௌரவிக்காதிருப்பதேன்?

ப: பாவம், திருவள்ளுவர் தமிழனைப் பிறந்து தொலைத்துவிட்டாரே!

கே: உமது காரியாலயத்தில் உம்மைச் சந்தித்தபோது வாசகர் என்று என்னைக் கௌரவிக்காததேன்?

ப: நல்ல ஆளையா நீர்! என்னிடம் இலவசமாக சட்ட ஆலோசனை வேறு பெற்றுக்கொண்டு இப்படி ஒரு குண்டைப் போடுகிறீரே!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: ''பொன்னனின் புலுடாக்கள்'' என்ற தலையங்கத்தில் ஒரு புத்தகம் எழுத எண்ணுகிறேன். அதற்கு முகவுரையை நீங்கள் எழுதுகிறீர்களா?

ப: நான் எழுதத் தேவையில்லை. இப்பொழுது பொன்னரைப் புழுக ஆரம்பித்திருக்கும் ஊர்காவற்றுறை நவரத்தினத்தின் அக்காலப் பேச்சுக்களைத் தொகுத்துப் போடும். அதுபலே பொருத்தமாக இருக்கும்!

கே: அமெரிக்காவிலிருந்து குணமாகிச் சென்னை திரும்பியதும் தமிழக முதலமைச்சர் மக்களுக்கு செய்த முதல் நன்மையென்ன?

ப: 'தமிழ் நாடு' என்ற பெயரை இந்திய அரசியற் சட்டத்தில் இடம்பெறச் செய்வதற்கு எடுத்த முயற்சியில் வெற்றிபெற்றது!

ஃ

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தும் அரசாங்கம், சிங்கள ஊழியர்களை தமிழ்படிக்க வைக்க முயற்சி எடுக்கிறதா?

ப: அப்படி எடுத்தால் தான் இலங்கையின் மொழிப் பிரச்சினையே தீர்ந்துவிடுமே!

கே: தமிழ் நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் விலை அதிகரித்திருப்பதன் காரணம் என்ன?

ப: புத்தகம் பத்திரிகைகளின் இறக்குமதியும் அந்நியச் செலாவணிச் சான்றிதழ் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டதுதான்!

வே. க. பூபாலசிங்கம்,
கைதடி வடக்கு.

கே: காக்கை இனத்தில் உள்ள ஒற்றுமையை மானிட இனத்தில் காணமுடியவில்லையே! ஏன்?

ப: மனிதனுக்கு காக்கையைவிட ஓர் அறிவு மேலதிகமாக இருப்பது தான் காரணம்!

கே: இக்காலப் பெண்களுக்கும் அக்காலப் பெண்களுக்கும் வித்தியாசம் என்ன?

ப: அக்காலப் பெண்களிடம் அக அழகும் இருந்தது. இக்காலப் பெண்களிடம் புற அழகு மட்டுமே இருக்கிறது! இது தான் வித்தியாசம்!

ஃ

பச்சைப்பாலி,
வவுனியா.

கே: றோட்டுக்குப் போடவேண்டிய கற்களை றோட்டுக் கான்களில் பாகக் கணக்கில் குவித்து வைக்கின்றார்களே அதன் காரணம் என்ன?

ஃ

''ப: நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியட்டும்'' என்ற நினைப்பில் தான்!

க. குகன்,
மட்டக்களப்பு.

கே: மட்டக்களப்புப் பெரியாஸ்பத்திரியில் பிறக்கும் பிள்ளைகளின் பிறப்பு விபரம் தமிழில் எழுதிக்கொடுத்தும் தமிழில் பதியாமல் ஆங்கிலத்தில் மறைமுகமாகப் பதிகிறார்களே. இதைத் தடுக்க தமிழரசுக் கட்சியால் ஏதும் செய்ய முடியுமா?

ப: தமிழரசுக் கட்சி இது பற்றி நடவடிக்கையெடுத்துக் கொண்டுதானிருக்கிறது!

ஃ

சி. கருணாநிதி,
எல்ல.

கே: தமிழை இழித்துரைக்கும் ஈ. வே. ராமசாமியை யார் பெரியார் என்று அழைக்கும்படி செய்தது.

ப: தமிழர்கள் தாம்!

கே: தற்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் திருக்குறள் சிறந்ததென்று நான் கருதுகிறேன். ஈ. வெ. ரா. திருக்குறளைத் தாழ்த்துகிறாரே!

ப: அவர் திருக்குறளைத் தாழ்த்திப் பேசுவதால்தான் திருக்குறள் ஆர்வம் உங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே அவர் செய்வது நன்மைதானே!

ஃ

ஆர். எஸ். வாசு,
உடப்பூர்.

கே: ஒரு கன்னிப் பெண்ணுக்கு இன்பமும் துன்பமும் ஒரே சமயத்தில் ஏற்படுவது எப்போது?

ப: அவளது திருமண முதலிரவின்போது!

ஃ

வே. நவரத்தினம்,
மு. இரத்தினம்.
கரணவாய் தெற்கு.

கே: காவலூர் எம். பீ. தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கிறாரே. ஏன்;

ப: எதிரிக்கு எதிரி நண்பனல்லவா?

கே: யாழ் மாநகரசபைத் தேர்தலில் ஏன் தமிழரசு ஆதரவாளர் தோல்வி அடைந்தனர்?

ப: உண்மை இன்னும் தூங்குவதால்!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: மனைவிக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கணவனுக்கு நிம்மதி எப்போது கிடைக்கிறது?

ப: மனைவி கட்டாயமாகக் கீழ்ப்படிந்து இருக்கவேண்டிய குறிப்பிட்ட நேரங்களில் மட்டும்!

கே: திடீரென்று பெண்ணாக மாறிவிட்டால் என்ன செய்வீர்கள்?

ப: உடனே ஒரு மினிஸ்கேர்ட் தைத்துப் போட்டுக் கொள்வேன்!

ஃ

இ. இராஜ்,
நாவல்நகர்.

கே: யாழ் மாநகரசபையில் தமிழரசுக் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி புரியுமா?

ப: பொறுத்திருந்துபார்ப்போம். ஆனால் இத்தகைய போலிக் கூட்டுக்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது!

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: கிளிநொச்சி பட்டின சபை கூட்டங்களிலே குழப்பத்தை விளைவிக்க முற்படும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளின் அந்தரங்க நோக்கமென்ன?

ப: தமிழரசு ஆட்சியை வீழ்த்திதங்கள் எஜமானர்களிடமிருந்து நல்ல பெயர் பெறுவதுதான்!

ஃ

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: இந்தியாவில் சிறந்த அரசியல்வாதி யார்?

ப: அறிஞர் அண்ணா!

## சங்கப் பலகை

# தமிழன் கனவு

கவிஞர்: காசிஆனந்தன்
வெளியீடு: ரகுநாதன் பதிப்பகம், கொழும்பு-3
விலை ரூபா.2.

'தமிழன் என்றோர் இனம் உண்டு தனியே அதற்கு ஒரு குணமுண்டு' என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பாடிய கவிதை நினைவுக்கு வருகிறது, தமிழன் கனவு என்ற கவிதைத் தொகுப்பைக் கண்டதும். தமிழனுக்குப் பலப் பல தனித் தன்மை பெற்ற குணங்களுண்டு. ஏனைய இனங்களிலும் பார்க்க முதல் இனமாகவும் அவன் வாழ்ந்தான்—வாழ்கிறான்—வாழ்வான்.

ஆம் இதுவும் ஒரு உறுதி பெற்ற கனவுதான். நித்திரை மயக்கத்தில் எழும் கனவல்ல. விழிப்புணர்வுடன் இருக்கும்போது விளங்கும் கனவு. என்றாவது ஒருநாள் இந்தக்கனவு பலிக்கும் என்றிருப்பதை விட்டு கனவு பலித்துக் கொண்டிருக்கிறது என்பதே சரி.

ஆம் 'தமிழன் கனவு' எப்படிச் சொல்லத் தூண்டுகிறது?

வீரமும் காதலும் தேசபக்தியும் சுரந்து ஊறிச் செறிந்து பரந்த தமிழகத்து மண்ணிற்கு எழுச்சி பெற்ற உணர்ச்சிக்குப் பஞ்சமே இல்லை. இந்த உணர்ச்சி தமிழுடன் பிறந்தது. இயற்கையை தன்னுள்ளடக்கிப் பிறந்தது. அது காரணமாகவே எண்ணற்ற வீரர்கள் தமிழகத்தில் தோன்றினர். எண்ணற்ற வீரக் கலைகள் தோன்றின. எண்ணற்ற கவிஞர்கள் தோன்றினர்.

இந்தப் பாரம் பரியத்தில் வந்த கவிஞர்களில் பாரதியும் பாரதிதாசனும் அண்மையில் நமக்கும் தமிழுக்கும் புதியதோர் வீரத்தைப் படைத்தனர். தமிழன் விழித்துக் கொண்டான். அதற்கு வழிகாட்டியது 'அண்ணா' என்ற மூன்றெழுத்து. கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் சுதந்திரமாகப் பணியாற்றும் வாய்ப்பும் எழுந்தது. கவிஞர்கள்தோன்றினர்; கவிமலர்கள் பூத்தன. தமிழன் கனவு அந்தப் பேரெழுச்சியில் பிறந்த ஒரு வாடாத மலர்; மணங்குன்றாத மலர். தமிழனின் ஆசைக் [illegible] அவன் வாழும் சூழலை—வாழவேண்டிய சுதந்திரத்தை—எப்படி வாழவேண்டும் என்ற தெளிவை அவன் படைத்த தமிழ் நாட்டை — அவனைத் தமிழனாக வாழவைக்கும் தமிழ மொழியைப் பெருமை செய்யும் தனிப் பெரும்பண்பில் தன் உணர்ச்சிக் கருவூலக் கனவுகளை நமக்கு அள்ளி அள்ளித் தருகிறார் கவிஞர் காசி ஆனந்தன்.

நானும் என்னுயிர்த்
தமிழர் தானையும்
தினும் உறக்கமும்
இன்றிக் களத்திடை
அறப்போர் நடத்தும்
அழகின் சிறப்புக்
கேண்மினோ
செகத்துள்ளீரே!



என்று கவிஞர் பாடும் இந்த நாலு வரிகள் மட்டும் 'தமிழன் கனவு' எப்படிப் பட்டது என்பதை உணர்த்தப் போதுமானது.

இந்தத் தமிழன் கனவு புத்தக வடிவத்தில் உள்ளதால் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு, தமிழன் கனவுப் புத்தகத்தை வாங்கிவைப்பதால் தமிழுக்கும் புலமைக்கும் பெருமை செய்தவராவர்.

இதோ இன்னொரு கவிதையைப் பாருங்கள்.

''தமிழர் பொன்னாட்டைத்
தாயக மண்ணைத்தர
மறுக்கின்றவனெவனோ?
இமை நொடிப் போதி
லெழுந்திரு தமிழா இன்
னுயிர் நமக்கொரு
பொருளோ?
பைந்தமிழ் மொழியை
எவன் பழித்தாலும்
பழித்தவன் தலைகொண்டு
வாடா
ஐந்து துண்டாக்கி
அடுப்பினில் வைப்போம்
அது நமக்குணவாகும்
போடா''

என்று ஆவேசத்தில் கூறுகிறார்.

தமிழன் மனிதனைக் கொன்றுசாப்பிட்டதில்லை... அப்படிச் சரித்திரம் கிடையாது ஆனால் கவிஞரின் வீர உணர்வு—குமுறல் உணர்வு அப்படிச் சொல்லாகத் தெறிக்கிறது.

கொந்தளிக்கும் உள்ளக் குமுறலின் அடித்தளத்திலே கவிஞரின் கருணையுள்ளத்தையும் காண்கிறோம். தலையைச் சுட்டுத் தின்போம் என்று ஆவேசத்தில் கூறும் அதே கவிஞர் சுவை உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார்... அங்கே கோரமில்லை—கொடுரமில்லை. கருணையும், பக்தியும், அன்பும் தவழ்கிறது... ஆவேசமும் ஆத்திரமும் கொதித் தெழுந்தாலும், அதே வேளையில் அன்பும் பக்தியும் கருணையும் பொழியும் கவியுள்ளத்தைக் காண்கிறோம். அன்பில் தன்னையே மறந்த கவிஞர் தமிழன் கனவு வெற்றியாகத் திருப்பம் பெற்றதைச் சொல்லுவதும் எளிதோ! எப்படித் தான் இந்தக் காட்சியை நான் உங்கள் மனத்தில் பதிய வைப்பேனோ! என்றும் சொல்லுகிறேன்

இறையவன் நெஞ்சம்
இரங்கியதென்கோ
அறநெறியாளர்
அருள்வலி யென்கோ!
தமிழர் பண்பின்
தகைமை யென்கோ!
இமைநொடிப் பொழுதில்
எதை நான் செம்புவன்?

என்று தமிழன் பெருமையை அளவிட முடியாத உயர்ந்த நிலையில் வைத்து விடுகிறார்.

கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளுக்கு நீண்ட மதிப்புரைகள் அவசியமில்லை. தமிழன் கனவுக் கவிதைகளை படித்தால் ஏன் விளக்கம் தேவையில்லை என்பது விளங்கிவிடும். கவிதைகளில் காணும் துடிப்பு நம் உள்ளத் துடிப்புடன் கலந்து விடுகிறதென்றால் நீண்ட மதிப்புரை எதற்கு!

பதிப்பகத்தாரின் சிறந்த வெளியீடு. அதுவும் கவிஞர்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தமிழுக்குத் தனிப்பிரிவு உடனடித் தேவை!

அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் மீது கிளிநொச்சி பா. உ திரு. கா. பொ. இரத்தினம் பல சுற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார். திரு. இரத்தினத்துடன் சேர்ந்து நாமும் அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளரின் நடவடிக்கைகளை மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்நாட்டில் தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் திணைக்களங்கள் இரண்டு. ஒன்று கல்வித் திணைக்களம்; மற்றது அரசகரும மொழித் திணைக்களம்.

அரசகரும மொழித் திணைக்களத்தின் மீது—அத் திணைக்களம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்தே—இந் நாட்டுத் தமிழ்பேசும் மக்களும் அவர் தம் பிரதிநிதிகளும் கடுமையான கண்டனம் தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

அரசகரும மொழித் திணைக்களத்தின் கடமையும் பொறுப்பும் மகத்தானது. இந்நாட்டின் மொழிச் சட்டங்களை ஏனைய அரசாங்கத் திணைக்களங்களில் அமல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதும், மொழிச் சட்டங்கள் சரியாக அமல் நடக்கப் படுகிறதாவென்பதைக் கண்காணிப்பதும், அரசகருமங்களுக்கு வேண்டிய சொற்றொடர்களையும். பிரமாணங்களையும் அரசகரும மொழிகளில் உருவாக்குதலும் போன்ற பல்வேறு கடமைகளும் பொறுப்புக்களும் நிறைந்தது அரசகரும மொழித் திணைக்களம்.

சிங்களச் சட்டமாக இருந்தாலும்சரி, தமிழ் மொழி விசேட விதிகள் சட்டமாக இருந்தாலும்சரி இரண்டையும் சரிவர நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை அரசகருமமொழித் திணைக்களத்தின் கைகளில் தான் இருக்கிறது.

ஆனல் அரசகரும மொழித் திணைக்களம், இந் நாட்டில் இரண்டு மொழிச் சட்டங்கள் இருப்பதை அடிக்கடி முற்ருக மறந்துவிடுகிறது. இந்த "மறதி" வேண்டுமென்றே ஏற்படுகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழர்கள் மீது சிங்களச் சட்டத்தை திணிக்கு விட அரசகரும மொழித் திணைக்களம் முயற்சிக்கிறதே தவிர 1958ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட சட்டத்தையும் அச்சட்டத்தின்கீழ் 1966ம் ஆண்டு ஜனவரியில் நிறைவேற்றப்பட்ட பிரமாணங்களையும் அரசகருமங்களுக்கு பயன்படுத்த அரசகரும மொழித் திணைக்களம் இதுவரை என்ன உருப்படியான நடவடிக்கையை எடுத்திருக்கிறது?

அரசகருமமொழித் திணைக்களம், அந்தரங்க சுத்தியுடன் தமிழ்மொழிப் பிரமாணங்களை அமல் செய்வதற்கு போதிய நடவடிக்கையெடுத்திருந்தால், இன்று வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக மலர்ந்திருக்கமுடியும். ஆனல் தமிழ்மொழிச் சட்டத்துக்கு விரோதமாக, வட, கிழக்கு மாகாணங்களில்கூட தனிச்சிங்களத்தைப் புகுத்துவதற்கு அரசகரும மொழித் திணைக்கள அணையாளர் வரிந்துகட்டிக் கொண்டு செயற்பட்டு வருகிறார்.

அரசகரும மொழித் திணைக்களத்தின் முன்னைய ஆணையாளரோடும் தமிழ்த் துரோகிகளோடும் மத்திய வங்கி, செய்தித் திரட்டு போன்ற தூய தமிழ்ச் சொற்களை ஏற்கச் செய்வதற்கு எத்துணைதூரம் தமிழரசுப் பிரதிநிதிகள் தங்கள் நேரம் நினைப்பு யாவற்றையும் செலவிட்டுப் போராட வேண்டியிருந்தது என்பதை இந்நேரத்தில் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

முன்னைய ஆணையாளர் கடைப்பிடித்துவந்த அதே தமிழ் விரோதப் போக்கினையே இன்றைய ஆணையாளரும் பின்பற்றி வருவதாகத் தமிழ் பேசும் மக்கள் சந்தேகப்படுகிறார்கள் இல்லாவிட்டால், தமிழ் மொழிப் பிரமாணங்களுக்கு முற்றிலும் முரணாக அரசாங்கக் காசோலைகளைத் தனிச் சிங்களத்தில் எழுதுமாறு ஆணையாளர் திணைக்களங்களுக்கு தன்னிச்சையாக உத்தரவிட்டிருந்ததேன் என்று கேட்க விரும்புகிறோம்.

அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் மொழி அலுவல்களைக் கவனிப்பதற்கு ஓர் உதவி ஆணையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறாரே என்று சாட்டுக் கூறப்படலாம். போதிய அதிகாரத்தை அளிக்காமல் ஒன்றல்ல, நூறு உதவி ஆணையாளர்களைத்தான் நியமித்து என்ன பயன்?

தமிழ் மொழி பெயர்ப்பு தமிழ்ச் சொல்லாக்கம், போன்றவற்றில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் தமிழ் மொழிக்குப் பொறுப்பாகவுள்ள உதவி ஆணையாளர் அதில் ஓர் முடிவு எடுக்க வேண்டுமே தவிர, ஆணையாளர் தன்னிச்சையாக வெளியே உள்ளவர்களுடன் கலந்து பேசி அதை உதவி ஆணையாளரிடம் திணிப்பது முறையற்ற—நியாயமற்ற செயலாகும்.

இவை தவிர, அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு, சொல்லாக்கம் போன்ற வேலைகள் ஆமைவேகத்தில் இயங்குகின்றனவா அன்றி முற்ருக ஸ்தம்பித்து விட்டனவா என்பது தெரியவில்லை. அரச கரும மொழித் திணைக்களம் புதிய தமிழ் சொற்றொகுதி எதையும் அண்மைக் காலத்தில் வெளியிட்டதாகவும் நாம் கேள்விப்படவில்லை.

லக்சல, சல்பில போன்ற சிங்களப் பெயர்களை அரசாங்க ஸ்தாபனங்களுக்குச் சூட்டுவதற்குப் பொறுக்கி எடுத்துக் கொடுக்கும் அரச கரும மொழித் திணைக்களம், அவைக்கேற்ற தூய தமிழ்ச் சொற்களையும், ஒரு சேர வழங்குவதற்குத் தவறி வருகிறது. இதனால் தமிழ் மொழியில் சிங்களச் சொற்கள் நிறைய ஊடுருவி வருகின்றன. இதுவும் ஒருவகைச் சிங்களத் திணிப்பன்றி வேறென்ன?

தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் பின்னர் பார்த்துக் கொள்வோம்; அசட்டையாக இருந்து விட்டால் சிங்களச் சொற்கள் தமிழில் ஊடுருவட்டும் என்ற கெட்ட எண்ணமே இதற்குக் காரணமென்று கூறுவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும?

தமிழ் மொழிச் சட்ட அமுலைக் கவனிப்பதற்கு எந்தச் சிங்கள ஆணையாளரும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் முன்வருவார் என்று இனியும் நாம் நம்பியிருக்கமுடியாது. தமிழ்மொழிச்சட்டப் பிரமாணங்கள் செம்மையாக அமுல் நடத்தப்படுவதற்கும், தமிழ் சொல்லாக்கம் ஒழுங்காக நடைபெறுதற்கும், தூய தமிழ்ச் சொற்கள் நடைமுறைப்படுத்தபடுவதைக்கண்காணிக்கவும் இனி ஒரேயொரு வழிதான் எஞ்சி இருக்கிறது. அதுதான் அரசகரும மொழித் திணைக்களத்திலிருந்து தமிழ்ப் பிரிவை வேறுபடுத்தி தனியொரு தமிழ் ஆணையாளரின்கீழ் அதை இயங்க வைப்பதாகும்.

இந்நாட்டு அரசகருமங்களில் தமிழுக்கு அரசாங்கம் அளித்திருக்கும் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும் சீராக நடைமுறைப்படுத்தவும், தமிழுக்கு அதிகாரமுள்ள தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப் படவேண்டும் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கட்சிபேதமின்றி பிரதமரை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

# மறு பிறப்பு உண்மையா?

முற்பிறப்பு நினைவுகள் பற்றி பல சங்கதிகள் பத்திரிகைகளில் காலத்துக்குக் காலம் வெளி வந்திருக்கின்றன. மறுபிறப்பு கொள்கையில உறுதியான நம்பிக்கையுடையவர்கள், மறு பேச்சின்றி அவற்றை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதில் நம்பிக்கையற்றவர்கள் இக்கதைகளையெல்லாம் மடத்தனமானது என்று நிராகரித்து விடுகின்றனர். ஆனல் இப்பிரச்சினையில் ஐயமுள்ள சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

விஞ்ஞான ஊக்கமுள்ள மனம் படைத்த ஒருவன், எப்படியென்ருலும் இப்பிரச்சினையை திறந்த மனத்துடன் ஆராயவே விரும்புவான். அண்மையில உலகெங்கிலுமுள்ள விஞ்ஞானிகள் பலா ஒன்று சேர்ந்து ஒரு குழுவாக இயங்கி இப்பிரச்சினைபற்றி ஆராய்நதிருக்கின்றனர்.

## இரண்டரை வயது மஞ்சுவும் 4வயது சிறுவனும் கூறிய சம்பவம்

மஞ்சுலதா எனப்படும் ஐந்து வயதுச் சிறுமியின் மறுபிறப்புப் பற்றிய செய்தி ஒன்று கிடைத்துள்ளது. இச் சிறுமி தபாலதிகாரியான திரு பி. என். பர்காவின் மகள். மஞ்சு இரண்டரை வயதிலிருந்தே தனக்கு இரு வீடுகள் இருப்பதாகச் சொல்லி வந்தாள். மேலும் அவ் வீடுகள் பற்றிய விபரங்களையும் கூறினள். அவ் வீடுகளில் மின்சாரம் பொருத்தப்பட்டிருப்பதாகவும், பல அறைகள் இருப்பதாகவும் அவள் கூறினள்.

தொடக்கத்தில் அவள் கூறியவற்றை பெரும் அக்கறையெடுத்து யாரும் கவனிக்கவில்லை. ஒரு நாள் ஆக்ராவிலுள்ள "துலியாகஞ்" என்னும் இடத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வீட்டைக் கடந்து செல்ல நேரிட்டபோது. 'இது தான் எனது வீடு' எனக் கூறினள்.

வீட்டுக்குத் திரும்பியதும். தான் கடந்த காலத்தில் வாழ்ந்ததாகத் தோன்றிய அவ் வீட்டுக்குப் போக வேண்டுமெனப் பிடிவாதமாக அழுதாள்.

ஒரு நாள் மஞ்சுவின் தாய், திரு. பிரதாப் சிங் சதுர்வேதி என்னும் வழக்கறிஞருக்குச் சொந்தமான அந்த வீட்டுக்கு மஞ்சுவை அழைத்துச் சென்ருள். வீட்டினுள், மஞ்சு தனது கடந்த கால வாழ்க்கையுடன் தொடர்புடைய பல பொருட்களை அடையாளம் கண்டு கொண்டாள். சதுர்வேதியின் மாமியார் ஒருவர் அதே வீட்டில் 1952-ம் ஆண்டில் மரணமடைந்த செய்தி அதன் பின்னர்தான் தெரிய வந்தது. அவள் தான் பர்காவின் மகளாக மறு பிறவி எடுத்தாள் எனக் கருதப்படுகிறது.

மஞ்சு பின்னர் பிரோசபாத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டாள். அங்கும் தன் கடந்த கால வாழ்க்கையுடன் தொடர்புடைய பலரை அடையாளம் கண்டு கொள்ள அவனால் முடிந்தது.

டாக்டர் எச். என். பானர்ஜி

●

"அம்மா எனக்கு இதை விட இன்னொரு வீடும் இருக்கிறது. நான் றூ கொம்பனுறியோவில் உள்ள ஒரு வீட்டில் வாழ்ந்ததாக ஞாபகமிருக்கிறது. அவ் வீட்டுக்குரிய இலக்கம் 69. நான் அதைச் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறேன் அம்மா" என்று ஒரு 4 வயதுச் சிறுவன் கியூபாவிலுள்ள ஹாவனுவில் தன் தாயிடம் கூறினன்.

இச் சிறுவனின் பெற்ருேர்கள் அப்போது ஹாவன்ஞவில் வேறு ஒரு தெருவிலுள்ள வீட்டில் வாழ்ந்து வந்தனர். பிரச்சினைக்குரிய இச் சிறுவன் பிறந்ததும் இவ் வீட்டிற் தான்.

சிறுவன் தொடர்ந்து தனது முற் பிறப்பு வாழ்க்கைபற்றி அடிக்கடி கூறிக் கொண்டிருக்கவே, ஒரு நாள் பெற்ருேர்கள் அவனுடன் உரையாடி பின்வரும் விபரங்களைக் கண்டுபிடித்தனர்.

"நான் 'றூ கொம்பனுறியோ'விலுள்ள வீட்டில் வாழ்ந்தபோது எனது தந்தையின் பெயர் பியர் சாகோ. எனது தாயின் பெயர்அம்பாரோ எனக்கு இரு தம்பிகள் இருந்தாகவும் அவர்களுடன் விளையாடியதாகவும் ஞாபகம். அவர்களது பெயர்கள் மேர்சிடெஸ், ஜீன்.

'நான் கடைசியாக 1902ம் ஆண்டு பெப்ரவரி 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அவ்வீட்டை விட்டுக் கிளம்பியபோது, எனது தாயார் கதறி அழுதாள்.

'எனக்கு அப்போது 13 வயது. நான் அப்போது அமெரிக்கன் மருந்துக் கடையில் மருந்து வாங்குவது வழக்கம். ஏனெனில் அங்குதான் விலை மலிவு. எனக்கு அப்போதிருந்த பெயர் பஞ்சோ'.

இதையெல்லாம் கேட்ட சிறுவனின் பெற்ருேருக்கு இவை உண்மைதான என்பதை அறியும் ஆர்வம் மேலோங்கியது. சிறுவன் முற்பிறப்பில் வாழ்ந்ததாக கூறிய வீடு இதற்கு முன் அவர்களுக்கு தெரியாதது. அவ்வீட்டுக்கு ஒரு முறை கூட பெற்ருேர்களோ அச் சிறுவனே சென்றது கிடையாது.

ஆனல் அச்சிறுவனை முதன் முதலாக அங்கு கூட்டிச் சென்றபோது. தூரத்தில் வீட்டைக் கண்டவுடனேயே அவன் துள்ளிக்குதித்து 'ஆ, இதுதான் நான் முன்னர் வாழ்ந்த வீடு' என்று ஆர்வத்துடன் கத்திக்கொண்டே ஓடினன்.

'அப்படி உனக்கு அது ஞாபகமிருந்தால் உள்ளே செல்லேன்' என்ருர் சிறுவனின் அப்பா. சிறிதும் தயக்கமின்றி உள்ளே சென்ற சிறுவன், மளமளவென்று மாடிப்படிகளில் ஏறி தனது முந்திய தாய் தந்தையர் வழக்கமாக இருக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசகரும மொழித்திணைக்களத்தின்

## ஆணையாளர் மீது கிளிநொச்சி எம்.பி.சுமத்தும் குற்றச்சாட்டுக்கள்!

அரசகருமமொழித் திணைக்கள ஆணையாளர் மீது கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பலகுற்றச் சாட்டுகளைச் சுமத்தியுள்ளார். நிதியமைச்சருக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக்குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவை, அத்திணைக்கள ஆணையாளரது அதிகாரத்தினின்றும் வேறுபடுத்தி தனியான தலைமையின் கீழ் இயங்க உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் திரு. இரத்தினம், திரு. வன்னிநாயகாவிடம் கேட்டுள்ளார்.

நிதியமைச்சருக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பகுதி எவ்வாறு ஒதுக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் வருகிறதென்பதை தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.



திரு. இரத்தினம் ஆணையாளர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் வருமாறு:—

★ தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாகவிருக்கும் துணை ஆணையாளருக்குப் போதிய அதிகாரங்களைக் கொடுக்க ஆணையாளர் மறுக்கிறார்.

★ தமிழ்ப் பகுதியின் எல்லா நிர்வாக அலுவல்களையும் துணை ஆணையாளருடைய கருத்தைத் தழுவாமலும், அவரது கருத்துக்கு மாருகவும் வெளியிலுள்ள சிலரது அபிப்பிராயத்தைத் தழுவியும் செய்து வருகின்ருர். இதனுல் முந்திய உதவி ஆணையாளரைப் போன்று இந்த உதவி ஆணையாளரும் இடம்மாறிச்செல்ல எண்ணுகின்ருர்.

★ தமிழ்ப்பகுதிக்குவேண்டிய உத்தியோகத்தர்களைக் கொடுக்கவும் ஆணையாளர் மறுக்கின்ருர். மொழிபெயர்ப்பு வேலைகள்—தமிழில் மொழிபெயர்க்கவேண்டியவையும், சொற்ருெகுதி ஆக்கமும்—போதிய உத்தியோகத்தர்கள் இன்மையால் தேங்கிக் கிடக்கின்றன.

★ சொல்லாக்க வேலைக்கு சிங்களப் பகுதியில் ஓர் ஆராய்ச்சி உத்தியோகத்தரும், 6 ஆராய்ச்சி உதவியாளரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்ப் பகுதியில் ஒரேயொரு தற்காலிக உதவியாளரைக் கொண்டே சகல சொல்லாக்க வேலைகளையும் கவனிக்கும்படி ஆணையாளர் கூறியுள்ளார்.

★ இவைபோன்ற இன்னும் பல குற்றச் சாட்டுகள் அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர்மீது கூறப்படுவதால், தமிழ்ப் பகுதியைத் தனியாகப் பிரித்து தனியொரு ஆணையாளரின் கீழ் இயங்க வைக்க உடன் நடவடிக்கையெடுங்கள்!

## சிங்களச் சொற்களை தமிழில் எழுதுவதா?

### இலக்கிய மன்றம் கண்டனம்!

பொதுவாகத் தமிழ் மொழி உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்று நம்பப்பட்டு வருகின்ற பொழுதிலும், பல சந்தர்ப்பங்களில், ஏற்ற நல்ல தமிழ் சொற்கள் இருக்க சிங்களச் சொல்லே தமிழிலும் எழுதப்படுகின்றது. இத்தகைய செயல்கள் தமிழ் மொழியை அவமதிப்பதாயும் தமிழ் மக்கள் மனத்தைப் புண்படுத்துவதாயும் அமைவதால் இவை வன்மையான கண்டனத்துக்குரியவை என்பதைச் சுட்டிக் காட்டி, இந்நிலை தொடர்ந்தும் நீடிக்காமல் இருக்க ஆவன செய்யுமாறு அரசாங்கத்தை இம்மன்றம் வேண்டிக் கொள்கின்றது.

—மேற்படி தீர்மானமொன்றை உள் நாட்டிறைவரித் திணைக்களத்தின் தமிழ் மன்றம் தனது முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில நிறைவேற்றியுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தில் வள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழாவை யொட்டி வள்ளுவர் தபால்தலை வெளியிடக் கோரும் மற்ருேர் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

இரண்டாவது ஆண்டுக்கான மத்திய செயற்குழுவுக்கு தெரிவு செய்யப் பட்டோர் விபரம் வருமாறு:—

தலைவர்: திரு. க. இராசசிங்கம், துணைத்தலைவர்கள்: திரு. ச. த. சுந்தரேசுவரன், திரு. தி. சண்முகராசா பொதுச் செயலாளர்: திரு. வி. பத்மநாதன், துணைச் செயலாளர்: திரு. த. தங்கவேல், பொருளாளர்: திரு. க. சபாபதிப்பிள்ளை, துணைப் பொருளாளர்: திரு. பொ. குகதாசன், நூலகர்: திரு. ம. தனபாலசிங்கம், துணை நூலகர்: திரு. மூ. இரத்தினசிங்கம்.

செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் ச. இராசேந்திரன். சி. செ. கணேசபிள்ளை. அ. லெ. மு. முனுஸ், செ. சத்தியசீலன். ந. தங்கராசா. க. மகாலிங்கம், சி. பத்மயோகன். க. கனகசிங்கம், த. சிவசுப்பிரமணியம், வே. சிங்காரவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



## கேட்டதும் இரசித்ததும்

### "அசரீரி"

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளைக் கண்டிப்பதுதான் அசரீரியின் வேலையா என்று அங்குள்ள பொறுப்பாளர்கள் வட்டமேசை மகாநாடு நடத்தியதுடன் அசரீரி என்ற ஆசாமி யார் என்று அறிவதற்கு கழியோடித் திரிவதாகவும் அறியவருகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தமிழ் நிகழ்ச்சிகளை வைத்தே இலங்கைத் தமிழனின் கலை, கலாச்சாரம், பண்பு முதலியவைகளைக் கடல் கடந்த தமிழர்கள் அறியவேண்டியிருக்கிறது. அத்தகைய மகத்தான பணி செய்ய வேண்டிய ஒ. ப. கூ. தாபனம் திசை தவறிப்போகுமானுல் அது தமிழினத்துக்குச் செய்யப்படும்மகா பயங்கரமான பாதகமாகும். தவறுகளை எடுத்துக் காட்டும் அசரீரி கண்டனப் புலியல்ல!

தட்டிக் கேட்க ஆளில்லை என்ருல் தம்பி சண்டப் பிரசண்டம்' என்று ஒரு பழமொழி உண்டு. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாக சபையில் ஒரு தமிழன் அங்கம் வகிக்கவில்லை என்றகுறையைநமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டி கண்டித்திருக்கிருர்கள். மேல் சபையிலும் சடந்த வாரம் நமது உறுப்பினர் மு. திருச்செல்வம் அவர்கள் இதே பிரச்சினையைக் கிளப்பியுள்ளார்.

இந்த நிலையில், பூனையில்லா வீட்டில்எலிகள் சன்னதமாடுகின்ற விதத்தில் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தமிழ்ப் பகுதிகளில் இருக்கின்ற சில்லறைப் பொறுப்பாளர்கள் கூத்திடுவதை நாம் அனுமதிக்க முடியாது! தமிழ் ஒலிபரப்பு தமிழர்களுக்காகவேயன்றி தனிப்பட்ட ஒருசிலரின் தன்னிறைவுக்காகவல்ல என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

திருச்சி வானெலியை எடுத்துக் கொண்டாலும் சரி, சென்னை வானெலியை எடுத்துக் கொண்டாலும் சரி, அங்கே 'டப்பா' சங்கீதத்தை நாம் கேட்பது அரிதாகும். உண்மையான கலைஞர்களை உருவாக்கி விடும் நோக்கத்தோடு அங்கு செயலாற்றுகிருர்கள்.


எமதுவானெலியைத்திருகிவிட்டால் கேட்பதில் பெரும் பகுதி சினிமாவில் வரும் அம்மணப் பாடல்கள் யாரோ பெற்று விட்ட சப்பாணிப் பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டு 'ஆராரோ' பாடி, இலங்கைத் தமிழர்களை மீளா உறக்கத்திலாழ்த்தி அவர்களின் கலையையும் குழிதோண்டிப் புதைத்துவிடப் பார்க்கிருர்கள்.

எமது வானெலியில் நாம் கேட்கும் சினிமாப் பாடல்களை சும்மா ஒலிபரப்புகிருர்களென்று எண்ணிவிடக் கூடாது! ஒலிபரப்பப்படும் ஒவ்வொரு பாடலுக்கும், அது எத்தனை முறை ஒலிபரப்பப்பட்டாலும் சரி, அத்தனை முறைக்கும் பணம் கொடுத்தேயாகவேண்டும். நமது பணம் பாழாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் கலையும் பாதாளத்துக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டில்மெல்லிசை பாடும் தமிழ்க் கலைஞர்களுக்குப் பஞ்சமா? அவர்களைக் கொண்டு பாடவைத்து—பாடையில் வைத்து அல்ல—ஒலிபரப்பினுல் கலை வளர்ந்து விடுமா? பணம் கரைந்து விடுமா? அல்லது இந்த நாட்டில் தமிழ்க் கலைஞரைக் கூடாது என்பது இ...

( [illegible] )

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி, கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் இயங்கும் தொழ

# இதுவரை இலாபம் அடைந்த

## தொழிற்சங்கவாதிகளா? அன்றேல் பாட்

**1948-ல்** நாடு சுயாட்சி பெற்ற பின்னர் ஆட்சியிலுள்ளோர் யாவற்றையும் இலங்கையர் மயமாக்கவும், சிங்கள மயமாக்கவும் முனைந்து வருகின்றனர். இது தேசப் பற்றின் விளைவா, அன்றி இன, மொழி, மதத்தின்பால் கொண்டதீராதமோகத்தின் நிமிர்த்தமா என்பது விளங்கிக்கொள்ளமுடியாத சர்ச்சைக்குரிய புதிர். இதற்காக நிறைவேற்றப்பட்டதே 1949-ம் ஆண்டின் இந்திய—பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம். ஏக இந்தியாவில் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த பாரத மக்களின் ஒரு சாரார் பிரிவினைக்குப் பின்னர் பாகிஸ்தானியர் என பெயரை மாற்றிக் கொண்டதுபோல் இங்கும் மேற்கண்ட சட்டத்தின் வரவால் தலைமுறை தலைமுறையாக பிரித்தானிய பிரஜை என்றிருந்த நிலை போல் இந்திய, பாகிஸ்தானிய பிரஜைகளைத் தவிர்த்து 'நாடற்றோர்' என ஒரு புதிய வகுப்பார் உருவாயினர்.

திரிசங்குக்கொப்ப நாடற்று நலிவுறுவோர்களில் சுமார் 90 சத விதத்தினர் மலைநாட்டுப் பாட்டாளிகள் — பராரிகளாவர்; அறியாமையும் சுலபத்தில் எவரையும் நம்பி ஏமாந்து விடும் மனப்போக்கும் கொண்டுள்ளதே இவர்களின் இன்றைய இழிநிலைக்குக் காரணமாகும்.

ஏமாறுவதற்கென ஒரு கூட்டம் இருக்கையில் ஏமாற்றுவதற்கும் ஒரு கும்பல் இருப்பதுதானே இயற்கை. அதன்படி படிப்பறியா இவ்வேழைகளுக்கு உதவுமுகமாக ஜனனமானதுதான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா பிளாண்டேஷன் வேர்க்கர்ஸ் யூனியன், லங்கா யுனைட்டட் வேர்க்கர்ஸ் யூனியன், ஹில் கண்ட்ரி வேர்க்கர்ஸ் யூனியன், போன்ற சர்வரட்சக தொழிலாளர் பாதுகாப்புக் கழகங்கள்.

**நன்மை யாருக்கு?**

அன்றுதொட்டு இன்றுவரை இப் பாதுகாப்பு அமைப்புகளால் நன்மையடைந்தது பாட்டாளிவர்க்கமா அல்லது இச் சங்கங்களா என்பது வேறு விஷயம். இருப்பினும் நீங்கள் எம்மை நம்பினாலும் சரி புறக்கணித்து உதாசினப் படுத்தினாலும்சரி நாங்கள் உங்களுக்கு உதவி உங்களது அவலநிலையைப் போக்கியேதான் தீருவோம் என்றல்லவா போட்டு குட்டையைக் குழப்புகின்றார்கள்.

பலவிதமாக சிதறி ஈற்றில் தந்தை ஓர் யூனியனிலும், தனயன் பிறிதொரு சங்கத்திலுமாக தஞ்சம் புகுந்தனர்.

தஞ்சம் என வருவோரை தட்டிக் கொடுத்து அஞ்சேல் என ஆதரவளிக்க அவர்களைத் தவிர்ந்த ஏனையோரால் இயலாது என்பது அவர்களது ஏகோபித்த அபிப்பிராயமாகும். இந் நிலையில் ஊர் பிளவுபட்டால் என்னவோ என்பார்களே அதேபோன்று தத்தம் சங்கம் தான் கீர்த்திவாய்ந்தது, அனைத்திலும் சாலச் சிறந்தது, அவர்களால் ஆகாதது அனைத்துலகிலும் ஏதுமில்லை என்ற மாயவலையில் மூழ்கி ஒரே குடும்பத்தில் இருந்தபோதிலும் தந்தையும் மகனும் கீரியும், பாம்புமாக வாழ ஆரம்பித்தனர்.

இந்த துரதிஷ்ட இழிநிலை இன்றும் பரவலாக பல மலையகத் தோட்டங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

வறுமை, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை, பிணி போதிய வேலையில்லாமை

### மலையகத் தமிழரும்—தொழிற்சங்கங்களும்
### ஒரு கருத்து

என்னே இவர்களது பரந்த மனப்பான்மை?

நீண்டகால அடிமைவாழ்வில் ஊறிப் போயுள்ளதாலும், தொழிலாளர்க்கிடையே தகுந்த — ஒரே சீரான கட்டுக்கோப்பு இன்மையாலும் இவ் வர்க்கம் இவைகளினூடே அல்லல் பட்டு ஆற்றாது துயருறும் இவர்களைத் தம்பால் கவர தொழிற்சங்கவாதிகளுக்கும் அது ஒன்றும் பகீரத் பிரயத்தனமாகப் படவில்லை. பழைய நடேசய்யர் காலந் தொட்டு இதே நடைமுறை

தான் வழ... மட்டும் ந... ன்றதே ... விட்டு ... வது சீரா... இச் சங்கா... யதாகக் கா...

டோ... னேம், ... னேம், க... தினேம், ... சுற்றிடே... த்தே... உதைத்... இவர்கள்... தவிர ... வாழ்க்கை... தினேம் எ... கூற எந்த ... அமைப்பா... ருமா?

கடந்த சு... னைந்து ஆண்... கைச் செல... கூடி இன்று... பில் நின்று... களை கிடு கி... ழத்தில் வீழ்... றதே, இவ் ... துயர்போக்... வடிக்க

# படிப்பதுபோல் போஸ் கொடுக்கச்

# உண்மையிலேயே படிக்க ஆரம்பித்து

## இரா செழியன் எம்.பி. கூறும் சுவையான தகவல்கள்!

'பசிவந்திட பத்தும்பறந்து போகும்' என்று ஒரு பழமொழி உண்டு. அண்ணா அவர்களைப் பொறுத்தவரை ஒரு நல்ல புத்தகம் வந்தால் போதும், அந்தப் பத்தோடு பசியும் சேர்ந்து பதினென்றாக எல்லாமே பறந்து போகும்!

அண்ணா அவர்கள் அமெரிக்காவிலுள்ள மெமோரியல் மருத்துவமனையிலிருந்து வெளிவந்த ஒருவாரத்துக்கெல்லாம், நியூயார்க்கிலுள்ள ஒரு பெரிய புத்தகக் கடைக்குச் சென்றிருந்தோம். காலை உணவு அருந்தியதும், சிறிது ஓய்வுக்குப் பின், வெளியில் சென்று நடமாட வேண்டும் என்பது டாக்டருடைய கட்டளை. அதன்படி வெளியில் சென்று வருவதில், ஒவ்வொரு நாள் ஒவ்வொருஇடமாகத்தேர்ந்தெடுப்போம். பூங்கா, ஹட்சன் நதியோரம், நியுஜெர்சி பக்கம், மியூசியம் இப்படி அண்ணாவை அழைத்துச் செல்வது வழக்கம். வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்காமல், சிறிது வெய்யிலில் செல்ல வேண்டும்; உலாவ வேண்டும். இவ்வுளவுதான், அதன் நோக்கம். ஒரு நாள் 'டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்' போகலாம் என்று ஒருவர் கூறினார்.

**அண்ணாவுக்கு பிடிக்கவில்லை**

சென்னையில் உள்ள 'காமதேனு'வைப் போன்றுஉள்ள பல்பொருள் பண்டகசாலைகள் பலஅமெரிக்காவில் உள்ளன. ஒரு நாளைக்கு மிலியன் டாலர் (அதாவது 75 லட்சம் ரூபாய்) சில்லறை வியாபாரம் செய்யும் 'மேசி' 'கிம்பல்சு' போன்று பல கடைகள் உள்ளன. ஆறு, ஏழு அடுக்கு மாடிகளைக் கொண்ட அந்தக் கட்டிடங்களில் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தால் மைல் கணக்கில் நடந்ததாக ஆகிவிடும். ஆனால் அண்ணா அவர்களுக்கோ அந்தக் கடைகள் பிடிப்பதில்லை. 'என்ன, சாமான்களைக் கொட்டி வைத்து, ஆடம்பரப்படுத்துகிறார்கள். நமக்கு என்ன தேவை?' என்று போகமாட்டார்.

'புத்தகக் கடைக்கு வேண்டுமானால் போகலாம்!' என்றார்கள் அண்ணா. வெளியில் புறப்பட்டால் போதும் என்ற நிலையில் நாங்கள் கிளம்பினேம். திரு. ராசாராம் அவர்களும் நானும் அண்ணாவுடன் 'ஸ்டாரண்ட்' என்ற புத்தகக் கடைக்குச் சென்றோம்.

**புத்தகத்தில் ஆழ்ந்தார் அண்ணா**

நியுயார்க்கில் 12-வது வீதியில் உள்ள பெரிய புத்தகக் கடை 'ஸ்டாரண்ட்' என்பது. அண்ணா அவர்கள் உள்ளே நுழைந்ததும், புத்தகங்களைப் புரட்டுவதில் ஆழ்ந்துவிட்டார்கள். பிற்பகல் ஒரு மணி நெருங்கிவிட்டது. அண்ணா சாப்பிடும் நேரம். அண்ணாவோ புத்தகங்கள் மத்தியில் ஆழ்ந்திருந்தார். கடைசியாகக் காரை ஓட்டி வந்தவர் உள்ளே வந்து கவனப்படுத்தினார். அண்ணா அவர்கள் தேர்ந்தெடுத்து வைத்த முப்பது, நாற்பது புத்தகங்களை வாங்கிக் கொண்டு திரும்பினோம்.

இதற்கு சில நாட்களுக்கு முன், அண்ணா அவர்களைப் படம் எடுக்க ஒரு அம்மையார்—புகைப்படக் கலையில் பேராசிரியராக ஒரு கலைக் கல்லூரியில் அந்த அம்மையார் பணியாற்றுகிறாராம்-திரு. பார்த்தசாரதி அவர்கள் இல்லத்துக்கு வந்தார். அண்ணாவைத் தனியாகவும் மற்றவர்களுடன் சேர்த்தும் பல படங்கள் எடுத்தார்கள்.

**படித்தபடி இருந்தார்**

அண்ணா அவர்களைப் பல வேலைகளில் ஈடுபட்டிருப்பதைப் போன்று படங்கள் எடுக்கப்பட்டன. படிக்கும் அறையில் புத்தக வரிசைகளில் பக்கத்தில் அண்ணா நிற்கும் பொழுது படங்கள் எடுத்தார்கள். 'நீங்கள் படிப்பதைப் போல ஒரு படம் எடுக்கிறேன். ஒரு புத்தகத்தை எடுத்துப் படிப்பதைப் போல பார்த்துக் கொண்டிருங்கள்' என்று புகைப்படம் எடுப்பவர் கூறினார். அண்ணா ஒரு புத்தகத்தை எடுத்து உள்ளே புரட்டி பார்த்தார்கள். பலவித கோணங்களில் புகைப் படப் பேராசிரியர்படங்களை எடுத்தார். படங்களை எடுத்து முடித்ததும், வேறு பக்கம் அவர் சென்றார். அண்ணா அவர்கள் கையில் இருந்த புத்தகத்தைப் படித்தபடி இருந்தார்கள்.



'படிப்பதுபோல' புத்தகத்தை வைத்துப் பார்க்கும்படி புகைப்படக்காரர் கேட்டுக் கொண்டார். அண்ணா அவர்கள் உண்மையிலேயே படிக்க ஆரம்பித்துவிட்டார்கள்!

'அண்ணாவைப் 'படிப்பது போல' இருக்கச் சொன்னால், உண்மையிலேயே அவர்படிக்க ஆரம்பித்து விட்டார்' என்று அருகிலிருந்த பேராசிரியர் அன்பழகன் கூறினார்.

சிலர் புத்தகங்கள் ஏராளமாக வாங்கி வைத்திருப்பார்கள்—வ... விலைக்கும் ... லாம்; இர... பிறகு அது ... ருக்கலாம். ... தகங்கள் ... ருப்பவர்க... 'படிப்பவர்... தோன்றும். ... யில் படிக்க... அறிவு ... அவர்கள் இ... தலைவர்களின் ... தாலேயே ... விட்டதுஎன்... அண்ணா அ... புத்தகம் கி... டால், அ... முடிக்கும்வ... மாட்டார்!

**புத்தகம் வ...**

செப்டம்ப... சென்னையை... பம்பாய்க்கு ... செல்லாம் ... இரவு 1... நியூயார்க் ... னம் கிளம்... இருந்த 9மண... நிலையத்திலி... களில் தா... வழியனுப்ப... கண்... ல், மகேஸ்கரன், ... தியவாணிமு... யார் உண... மதியழகன், ... எம். ஜி. ... கலைஞர் கரு... ணன் நெடுஞ்... யோரும் அ... அறைகளில் ... னர். கவலை...

அண்மையில் அமெரிக்காவுக்கு வைத்திய சிகிச்சைக்காக தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா சென்றிருந்தபோது, அவருடன்கூட இருநதவர்களில் தமிழக கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியனின் இளவலும், டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. செழியனும் ஒருவர். அப்போது அங்கு நடைபெற்ற சில சம்பவங்களை இங்கு கூறுகிறார் திரு. செழியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கங்களால் ...டந்தது யார்?

## பாட்டாளி வர்க்கமா?

...டும்பத்தில்
...ம் தந்தை
...யும், பாம
...பித்தனர்.

...ட இழி
...பரிவலாக
...நாட்டங்க
...டியதாக

...ழப்பித்
...மை, பிணி
...இல்லாமை

...ளும்

...அல்லல்
...துயருறும்
...ால் கவர
...ளுக்கும்
...த் பிரயத்
...வில்லை.
...ர் காலந்
...டைமுறை

தான் வழமைபோல் இன்று மட்டும் நடைபெற்று வருகின்றதேயொழிய விரல் விட்டு எண்ணுமளவுக்காவது சீரான வாழ்வுக்கு இச் சங்கங்கள் வழிகோலியதாகக் காணோம்.

டோபியை மாற்றினோம், பார்பரை நீக்கினோம், கணக்கனைத் துரத்தினோம், கண்டக்டரை ...ற்றினோம், அவனை ...த்தோம், இவனை உதைத்தோம் என இவர்கள் ஆர்பரிக்கலாமே தவிர உருப்படியான வாழ்க்கையை மேம்படுத்தினோம் என மார்தட்டிக் கூற எந்த தொழிற்சங்க அமைப்பாவது முன்வருமா?

கடந்த சுமார் பத்து பதினைந்து ஆண்டுகளில் வாழ்க்கைச் செலவு சிறுகச் சிறுகக் கூடி இன்று உச்ச வரம்பில் நின்றுகொண்டு இவர்களை கிடு கிடு அதல பாதாளத்தில் வீழ்த்த இருக்கின்றதே, இவ் வேளை இவர்கள் துயர்போக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் அல்லது என்ன முறையில் இதற்குப் பரிகாரம் காண இருக்கின்றனர். என்பது பெரும் மர்மமாகவிருக்கின்றது.

### பாடுபட்டு 10 சதம்!

ஒருவர் மாதம் மாதம் ரூபாய் 17.50 கூடுதலாகக் கேட்க, நான் மட்டும் என்ன சளைத்தவனா என்ற தோரணையில் அவரையும் ஒருபடி மிஞ்சி பிறிதொருவர் நாளாந்தம் ஒருரூபாய்க் கணக்கில் கேட்ட அதே வேளை மற்றொருவர் பத்தே ரூபாய் 17.50ஐ எள்ளியாடி, நாம் "தினமொன்றிற்கு ரூபாய் ஒன்று என்ற அடிப்படையில் சம்பள உயர்வு கேட்டுவருகின்றோம். இந்நேரத்தில் கபடதாரிகளின் வலையில் வீழ்ந்து காரியத்தை குட்டிச் சுவராக்கி விடாதீர்கள்" என ... முடுக்குகள், சந்து பொந்துகள் யாவற்றிலும் தமக்கே உரித்தான பாணியில் முரசு கொட்டினர்.

பத்து வருட போராட்டத்தின் இறுதியில் நடந்ததென்ன? பத்துசத உயர்வு

பி. சுப்பையா

பத்து சதத்தில் காரியத்தை 'சுபமாக' காதோடு காது வைத்தது போல் சாதித்து வெற்றிக்கொடி நாட்டிவிட்டார். இதிலுள்ள முக்கிய கவனத்திற்குரிய அம்சமென்னவெனில் இந்த அதே தொழிற்சங்கந்தான் மற்றவர்களின் மாதாந்த தான் இப் பரமாத்மாக்களால்பெற்றுத்தரமுடிந்தது; இதனால் போர்க்கொடி உயர்த்திய மற்றைய அமைப்புகள் செய்வதறியாது விழித்தன;

அன்றைய வாழ்க்கைத் தரமென்ன? இன்றைய வாழ்க்கைச் செலவு புள்ளி என்ன? விலைவாசி உயர்வு எத்தனை சதவீதத்தால் கூடியுள்ளது. ஏற்கனவே பங்கீட்டு அரிசி குறைப்பால் சொல்லொணா அவதியுறும் இவர்களுக்கு, இச் சிறு ஊதிய உயர்வு அவர்களது வாழ்க்கைத் தரத்தை இஞ்சித்தேனும் மேம்படுத்த உதவுமா?—போன்ற நேர்மையான, மனிதாபிமான வினாக்களுக்கு இனியாவது விளக்கம் தர முன்வருவார்களா?

ஆனால் ஒன்று, வேகிறவீட்டில் பிடுங்கினது ஆதாயம என்பதற்கொப்ப இவர்களால் பாட்டாளி வர்க்கத்தினர் பயனடைந்தனரோ இல்லையோ, நிச்சயமாக தொழிற்சங்கவாதிகள் லாபமடைந்து விட்டனரென்பது பரவலாக நிலவும் பொது சனக்கருத்தாகும். இதனை பல விதத்திலும் மறைக்க மக்களின் மனதை வேறுதிக்கில் திருப்ப எவ்வளவோ திருகுதாளங்கள் நடைபெறுகின்றன,

மாதாந்த நான்கு விடுமுறை தினங்கள் நீங்கலாக தொடர்ச்சியாக ஒரு நபர் 26 நாட்களுக்கு வேலைசெய்தாலும் இறுதியில் கூடுதலாகக் கிட்டுவது என்னவோ ரூபாய் 2.60 மட்டுமே. இதில் 4% சதவிகிதம் ஊழியர் சேமலாபநிதிக்கு. பத்து சதம் பிடிபட்டதுபோக மிகுதி ரூபாய் 2.50 இதாவது முழுதாக கைக்குக் கிட்டியதா என்றால் அதுவுமில்லை.

### சிந்தனைக்குரிய விஷயம்

அதிலும் அங்கத்துவ சந்தா கழிவுபட நமக்குக் கிடைப்பது ரூபாய் இரண்டே இரண்டுதாம். இந்த இரண்டு ரூபாயைக் கண்ணால் பார்ப்பதற்கும் தொடர்ச்சியாக விடுமுறையின்றி வியர்வை சிந்தவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் இந்த இரண்டு ரூபாய் போதுமானதா என்பதுதான் கேள்விக்குறி. மேலெழுந்தவாரியாக நோக்கும்போது அங்கத்துவ சந்தா வசூலிக்க இயலாமல்" தோட்டத்து செக்ரோல் (CHECK - ROLL) மூலம் கறாராக ஐம்பது சதத்தை வசூலிக்கும் இவ்விஷயத்தில்தான் அவர்கள் திருப்தி நிலையடைந்தார்களா அல்லது மாற்றமைப்புகள் உரிமைக்குரல் எழுப்பி போராடிக் கொண்டிருக்கும் போது நாம் மட்டும் வாளாவிருந்தால் சிலவேளை நமது முகத்திரை கிழிபடக்கூடும் என்ற நிலையில் 'திருப்தி' யடைந்தார்களா என்பவையெல்லாம் சிந்தனைக்குரிய விஷயங்கள்.

தொழிற்சங்கவாதிகளும் மானுடர்கள்தாமே! அவர்களுக்கும் உணவுக்காக ஒரு சாண் வயிறு உட்பட உடைக்காக எண்சாண் உடம்பும் உண்டே, அவர்கள் தாம் என்ன செய்வார்கள்? தயவு செய்து மீண்டும் பாருங்கள் வயிற்றுக்காக உணவா அல்லது உடம்புக்காக உடையா என்பதை.

### சுருங்கிய வயிற்றிலிருந்து கம்யூனிசம்!


மேலும் இத்தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு உபதேசிக்கும்போது "இந்த நாடு நமக்கு என்ன உதவிகளை செய்யும் என்றிராமல் நம் நாட்டுக்கு நாம் ஆற்றவேண்டிய பணி என்ன என்பதை யுணர்ந்து உறுதியுடனும், ஒற்றுமையுடனும் உழைப்போம்..." —என்று காலஞ்சென்ற ஜான் எவ். கென்னடியின் பாணியில் தேசிய நன்மையை மட்டும் கவனிக்கும்படி அறிவுறுத்துகின்றனர்.

நாடு என ஒன்றிருந்தால் தான் பிரசைகளுக்கும் நல்லது; தேசத்திற்கும் நல்லது. தேசிய நலனைக் கருத்தில் கொள்ளும்போது தொழிலாளர்களை நடமாடும் எலும்புக் கூடுகளாக்க முனையக் கூடாது. அவற்றை வைத்துத்தான் சித்திரமே எழுத முடியும். சுருங்கிய வயிற்றிலிருந்துதான் கம்யூனிசமே உற்பத்தியாகின்றது என்பதற்கு பல சரித்திர சான்றுகள் உள்ளன.

(9-ம் பக்கம் பார்க்க)

# ...ங்கச் சொன்னார்கள்!

## ...த்து விட்டார் அண்ணா!



...ார்த்துக்
...என்று
...வர் கூறி
... புத்த
... உள்ளே
...கள். பல
... புகைப்
...டங்களை
...ளஎடுத்து
... பக்கம்
... அண்ணா
... இருந்த
...டித்தபடி

... புத்த
...ார்க்கும்
...ரர் கேட்
... அண்ணா
...யிலேயே
...விட்டார்

...படிப்பது
... சொன்
...லேயே
...ரம்பித்து
... அருகிலி
... அன்பழ

... ஏராள
...வைத்திருப்

பார்கள்—வாங்கி' என்றால், விலைக்கும் வாங்கியிருக்கலாம்; இரவலும் 'வாங்கி' பிறகு அது மறந்துபோயிருக்கலாம். அப்படியும் புத்தகங்கள் சேர்த்து வைத்திருப்பவர்களைப் பார்த்தால், 'படிப்பவர்கள்' போலத் தோன்றும். ஆனால் உண்மையில் படிக்காதவர்களாக—அறிவு படியாதர்களாக அவர்கள் இருக்கலாம். புத்தகங்களின் அருகே இருப்பதாலேயே அறிவு கிடைத்துவிட்டது என்று பொருளல்ல! அண்ணா அவர்களிடம் ஒரு புத்தகம் கிடைத்துவிட்டால், அதைப் படித்து முடிக்கும்வரை அவர் ஓயமாட்டார்!

### புத்தகம் வாங்கி வந்தேன்

செப்டம்பர் 10-ஆம்தேதி சென்னையை விட்டுக்கிளம்பி பம்பாய்க்கு மாலை 4 மணிக்கெல்லாம் வந்துவிட்டோம் இரவு 1 மணிக்குத்தான் நியூயார்க் செல்லும் விமானம் கிளம்பும். இடையில் இருந்த 9மணி நேரம்விமான நிலையத்திலிருந்த தனி அறைகளில் தங்கியிருந்தோம். வழியனுப்ப வந்த திரு. அரங்கண்ணல், ஆசைத்தம்பி, மனோகரன், டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார், உணவு அமைச்சர் மதியழகன், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், கலைஞர் கருணாநிதி, அண்ணன் நெடுஞ்செழியன், ஆகியோரும் அங்குஅடுத்தடுத்த அறைகளில் தங்கியிருந்தனர். கவலையும் சோகமும் கப்பிய முகத்துடன் ஒருவரையொருவர் பார்த்தபடி ஏதோ சிலச் சில பேசியபடி உட்கார்ந்திருந்தோம்.

அண்ணா அவர்கள் என்னை அழைத்து, 'படிப்பதற்கு ஏதாவது புத்தகங்கள் பார்த்து வாங்கி வா! விமானத்தில் படிக்கலாம்!" என்றார்கள். நான் புத்தகக் கடைக்குச் சென்று, மூன்று புத்தகங்கள் வாங்கி வந்தேன்.

### எல்லாம் மறந்தார்

புத்தகங்களைப் பார்த்ததும், முகமலர்ச்சியுடன், தமக்குற்ற நோய், தாம் ஈடுபட்டுள்ள பயணம், எல்லாவற்றையும் அண்ணா அவர்கள் மறந்து, புத்தகங்களை வாங்கி ஆவலுடன் புரட்டிப் பார்த்தார்கள். அதில் ஒரு புத்தகம் இர்விங் ஸ்டோன் என்ற ஆசிரியர் எழுதிய ADVERSARY IN THE HOUSE (வீட்டினுள் எதிரி) என்ற நவீனமாகும். அதன் மேலட்டையில் ஒரு இரும்புக் கருவியைப் பிடித்துள்ள வலிவான கரம் படமாகப் போடப்பட்டிருந்தது. அந்தப் படத்தை அண்ணா அவர்கள் சிறிது நேரம் ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

"மிக நன்றாகப் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கரத்தில் வலிவும் உறுதியும் எப்படி பிரதிபலிக்கிறது!... இதே மாதிரி கரம்போட்டு, நமது கழகக் கொடியை அது பிடித்துக்கொண்டிருப்பதுபோல போட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களிடமும் காட்டி, புத்தகத்தின் மேலட்டையைக் கிழித்து, அவரிடம் அண்ணா கொடுத்தார்கள்!

### அண்ணா வாழ்வின் சிறப்பு

இன்னும் மூன்று மணி நேரத்தில் விமானம் புறப்பட இருக்கிறது உற்ற நோய்பற்றி, அதற்கு நடைபெறப்போகும் சிகிச்சை பற்றிய சிந்தனையுடன்—சோகத்துடன் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் அந்த நேரத்தில்கூட அண்ணாவின் சிந்தனை புத்தகத்தின்மீது செல்கிறது. புத்தகத்தின் அட்டையிலுள்ள கரத்தின்மீது செல்கிறது; அதிலும் அந்தக் கரத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடியைத் தந்து பார்க்கச் சொல்கிறது!

அண்ணாவின் கடந்த முப்பத்தைந்தாண்டுகால வாழ்வே அப்படித்தான் அமைந்துவிட்டது! புத்தகங்களைப் படிப்பதுதான் படித்ததை எந்த அளவுக்குச் சமுதாயத்துக்கு—அரசியலுக்கு—தனதுகழகத்துக்குப் பயன்படுத்தலாம் என்று சிந்திப்பது—இதிலேதான் அவர் வாழ்வு கலந்துள்ளது! நோயின் கொடுமை, மிகக் கடுமையாகத் தாக்கிய ... அவருடைய சிந்தனை ... இருந்தது!


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேஷன்
14 டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனமாகக் குடும்பம் நடத்துவது எப்படி?

## அதைக் கற்றுத்தர ஒரு ஸ்தாபனம்!

"காதல் வேகத்தில் கற்பனை செய்ததைப் போல் அல்ல, வாழ்க்கை' என்பதை தம்பதிகள் வெகு விரைவிலேயே உணர்ந்து கொள்கிருர்கள். இனிய தேனிலவு கழிந்தவுடனேயே வாழ்க்கை எதிர்பார்த்த படி இருக்காது' என்ற கசப்பான உண்மையை தெரிந்து கொள்கிருர்கள்.

பெண்களில் 'சிக்கனச் செல்வி' களும், 'ஆடம்பர தேவி' களும உண்டு. கணவனின் வருவாய்க்குள் குடும்பம் நடத்தும்கலையில் எல்லா பெண்களும் தேர்ந்தவர்களாக இருப்பதில்லை. சில கணவன்மார்கள், குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுத்து, அவ்வப்போது தேவையான பணத்தையும் தந்து' குடும்பத்தை தாங்களே நிருவகிப்பார்கள்.

இன்னும் சிலர், சம்பளக் கவரைப் பிரித்துக் கூட பார்க்காமல் மனைவியிடம் கொடுப்பார்கள். வருவாய்க்குள் செலவு அடங்காத குடும்பங்களில்சச்சரவுகளுக்குக் குறை விருக்காது. 'செலவுக்குப் பணம் போதவில்லை' என்று மனைவி, சதா நச்சரிப்பாள். 'மனைவி எப்படி செலவு செய்கிருளோ? தாய்வீட்டுக்கு கொடுத்தனுப்புகிருளோ' என்று கணவன் சந்தேகப்படுவான். இருவரும், சண்டை போட்டுக் கொள்வார்கள். மேலை நாடுகளில் இவ்வித சச்சரவுகள், மணவிலக்குகளில் போய்த்தான் நிற்கும்.

ஜெர்மன் கூட்டாசிக் குடியரசில் இவ்விதக் காரணங்களுக்காக குடும்பங்கள் சிதறுவதைத் தடுக்கும்பணியில், ஒரு ஸ்தாபனம் கடந்த பத்தாண்டுகளாக ஈடுபட்டிருக்கிறது! 'மக்கள் வரவுசெலவு ஆலோசனைக் கழகம்' என்பது அதன் பெயர். குடும்பங்களில் ஏற்படுகிற சச்சரவுகளுக்குச் சமரசத் தீர்வு கண்டு, தம்பதிகளிடையே மகிழ்ச்சிகரமான உறவு நிலவச் செய்வதே இதன் குறிக்கோள்.

சீராக குடும்பம் நடத்துவது எப்படி? என்று பருவப் பெண்களுக்குத் தெரிவதில்லை. கணவன் கொடுக்கும் பணத்தில் குடும்பம் நடத்த முடியாமல், பெண்கள் திண்டாடுவார்கள். தவணைக் கடன்களில் பல சாமான்களை வாங்கி அதற்கு கொடுத்துவிட்டு, குடும்பச் செலவுக்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுவார்கள். இவ்விதப் பெண்மணிகள் கடிதம் எழுதினல், அவசியமான ஆலோசனைகளை இலவசமாக வழங்குகிருர் இந்த ஸ்தாபனத்தை நடத்தும் வாலன்டின்.

## உங்கள் குழந்தை!

குழந்தைகளை அவர்களின் போக்கில் விட்டு அவர்கள் விருப்பப்படி வளர்ப்பதா? அல்லது நம்விருப்பப்படி வளர்ப்பதா?

குழந்தைகளுக்கு செல்லம் கொடுப்பதா? கண்டிப்பு வேண்டுமா?

குழந்தையை அடித்து வளர்ப்பதா? அணைத்து வளர்ப்பதா?

மீசையை முறுக்கிவளர்க்க வேண்டுமெனபது சிலர் கொள்கை. அடியாத மாடு படியாது என்பது சிலர் நம்பிக்கை. தட்டிக்கொடுத்தே காரியத்தை முடித்துக் கொள்ளலாமென்பது சிலர் நினைப்பு. குழந்தைகளை அவர்கள் போககிலேயே வளர்க்க சிலர் ஆசைப்படுகிருர்கள். அந்த வழிகளில் எந்த வழி சரியானது?

குழந்தையை பெரியவர்கள் சொற்படி நடக்க சிறு வயதிலேயே பழக்க வேண்டும். அதை அன்போடு செய்ய வேண்டும். ஆனல் கை நீட்டக்கூடாது. அளவுக்கு மீறிய செல்லமாக இருந்தாலும் சரி, அடக்குமுறையாக இருந்தாலும் சரி குழந்தை கெட்டுவிடும்.

சரியான வழி இதுதான். முதலாவதாக, தொடக்கம் முதற் கொண்டே குழந்தைகளிடம் பெரியவர்கள் சொற்படி நடக்கும் பழக்கத்தை வேரூன்றச் செய்ய வேண்டும்.

குழந்தைகளின் செயல்களை முதலில் இருந்தே தக்க வழிகளில் கட்டுப்பாடு செய்தாக வேண்டும. குழந்தை அழுகிருன். அல்லது பிடிவாதம் பிடிக்கிருன் என்று சில பெற்ருேர்கள் அவனுக்கு விட்டுக்கொடுத்துப் பழக்கம் செய்து, அவனைக் கெடுத்து விடுகிருர்கள்.

இரண்டாவதாக, அளவுக்கு மீறிக் கடுமையாக இருப்பதும் தண்டனையளிப்பதும், அச்சுறுத்துவதும் சரியல்ல. இவ்வாறு செய்தால் உறுதியில்லாத குழந்தைகள் பயந்தாங்குளிகளாகவும், உறுதிமிக்கவர்கள் பிடிவாதக்காரர்களாகவும் மாறுவார்கள். இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம் நலலதாக அமையாது.

மூன்ருவதாக, குழந்தையின் கருத்தைக் கவரவல்ல பயனுள்ள வேலைகளில் அவர்களை ஈடுபடச் செய்து கவனமாகவும் திறமையாகவும் வேலை செய்யப் பழகிக் கொள்ளும்படி செய்ய வேண்டும். பெரியவர்களுடன் சேர்ந்து வீட்டு வேலைகளில் பங்குகொள்ளும்படி செய்தல் அவசியம். இவ்வாறு செய்து வந்தால் பெரியவர்கள் சொற்படி நடக்கும் பழக்கம் தானுகவே குழந்தைகளுக்கு நாளடைவில் ஏற்பட்டு விடும்.

—மாலா

# நீங்களும் சமைக்கலாம்!

## மாம்பழக் குழம்பு

தே. பொ:—நன்கு பழுத்த 4 மாம்பழம், மிளகாய் வற்றல் 10. தேங்காய் ½ மூடி, சிறிது பெருங்காயம், தாளிக்க எண்ணை, கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, உப்பு, மஞ்சள்தூள்.

செ. முறை:—பழத்தைக் கழுவி தோல் உரித்து எடுக்கவும். சதையைக் கூழ் போல் ஆக்கிக் கொள்ளவும். தோலைசிறிது தண்ணீரில் பிசைந்து சதையை எடுத்துவிட்டு தோலை எறியவும். வற்றலையும் தேங்காயையும் அரைத்து இந்தத் தண்ணீரில் ஊற்றவும். மாம்பழச்சதையையும் இதில் சேர்த்துக்கொள்ளவும். சிறிது உப்பும் மஞ்சள்தூளும் போட்டுக் கலக்கி கொள்ளவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து கடுகு, உழுந்து, கறிவேப்பிலை, காயம் போட்டுத் தாழித்து இந்தக் குழம்பை ஊற்றவும். இளந் தீயாக எரியட்டும். குழம்பைக் கொதிக்க விடாமல் நுரை வந்ததும் இறக்கவும். சோறு, இட்டிலி, தோசைக்கு மிகவும் ருசியாக இருக்கும்.

## மாங்காய் பச்சடி

தே. பொ:— செங்காயாக பெரிய மாங்காய் 1, வெங்காயம் 10, மிளகாய்வற்றல் 6, அரைமூடி தேங்காய், எண்ணை, கடுகு, உழுத்தம்பருப்பு, உப்பு.

செ. முறை:—மாங்காயைக் கழுவி பொடிப்பொடியாக நறுக்கி, வெங்காயம் 5 வற்றல் வைத்து உரலில் போட்டு ஆட்டவும். மசிந்ததும் தேங்காயைப் பால் எடுத்து ஊற்றிமீண்டும் ஆட்டி வெண்ணெய்பதத்தில் வழித்து எடுத்து உப்புச் சேர்க்கவும்.

தாச்சியைக் காயவைத்து கடுகையும் மீளகாயையும் தாளித்து பச்சடியை அதில் கொட்டி இளந் தீயில் வேகவிடவும். நன்ருக வெந்ததும் இறக்கி வைத்துக் கொள்ளவும். இது சாப்பாட்டுடன் சேர்த்து சாப்பிட சுவை மிகுந்தது!

# ஒரு குடும்பத்துக்கு எத்தனை பிள்ளைகள் அவசியம்?

'தமிழர்கள் அதிகம்பிள்ளை பெறுகிருர்கள்; அதனல் சிங்கள மக்களுக்கு ஆபத்து, கர்ப்பத்தடை செய்யாதீர்கள்; அதிகம் பிள்ளைகளைப் பெற்றுக் குவியுங்கள்; என்று ஒரு சிங்களத் தலைவர் ஒற்றைக் காலில் நிற்கிருர்'

தகப்பன் பெயர் தமிழாக இருப்பதால் மட்டும் எல்லாரும் தமிழர் அல்ல. மற்ருெரு சமூகம் தமிழர்களாக மாறுவது தமிழர்களால் ஆதிகாலம்தொட்டு வெறுத்தொதுக்கப்பட்ட தொன்ருகும்.

ஒரு நாட்டை இரவோடு இரவாக ஒரு சிலரால் கைப்பற்ற முடியும். ஆனல் அதிகம் பிள்ளைகள் பெறுவதிலேயே ஒரு நாட்டைக் கைப்பற்ற முடியாது; முன்னேற்றவும் முடியாது.

தமிழ் சமூகத்தைப்பொறுத்தவரை அதிகம் பிள்ளைகள் பெறுவதைவிட, பெற்ற பிள்ளைகளைவிவேகிகளாகவும் வீரர்களாகவும் வளர்ப்பதே சிறந்தது, நாளும் பொழுதும் மக்கள் கூடிக் கொண்டு போகிருர்களேயன்றி நாடுஇருந்தபடியேதான் இருக்கிறது.

மக்கள் கூடினல் பசியும் பட்டினியும்தான் கூடும். ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு ஆணும் இருந்தால் போதும்.

ஒரு நாடு ஒவ்வொரு சமூகத்தின் ஒற்றுமையிலும், பண்பிலும், பெருந்தன்மையிலும் தான் வளருமேயன்றி, பெரிய மீன்சிறு மீனை தனக்கு இரையாக்கினலும் அதன் வாழ்க்கை ஒரு சில நாட்களுக்குள் முடிந்து விடும்என்பதுநாங்கள்கண்ட உண்மை. ஆகையால் எல்லோரும் வாழ வேண்டுமானல் அதிகம் பிள்ளைகள் வேண்டாம்.

—இரத்தினதேவி,
கொழும்பு 12.

(இக்கருத்துப்பற்றி சகோதரிகள் தங்கள் கருத்துக்களை எழுதலாம்.)



# மங்கையர் சங்கம்

### எழுதுங்கள்!

மங்கையர் சங்கத்துக்கு பெண்களிடமிருந்து கட்டுரைகள், சமையல் குறிப்புக்கள், வீட்டுக் குறிப்புக்கள் மற்றும் உபயோகமான விபரங்கள் வரவேற்கப்படுகின்றன

—ஆர்

# இளம் வயதிலேயே மணமுடிக்க கன்னியர் காளையர் துடிப்பு!

திருமணங்கள், சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' என்பது உண்மையோ, இல்லையோ நம்நாட்டைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான திருமணங்கள் பெற்ருேர்களால், "நிச்சயித்த வண்ணம்" நடக்கின்றன. எனினும் காலம் மாறி வருவதால் இப்போது சில பெற்ருேர்கள்மகள் மகனின் சம்மதத்தை முன் கூட்டியே கேட்டுத் தெரிந்து கொள்கிருர்கள்.

மேற்குநாடுகளைப் பொறுத்தமட்டில் ஆணும் பெண்ணும் காதலித்துப் பின்னர் திருமணம் செய்து கொள்கிருர்கள். முன்பெல்லாம் இவ்வித திருமணங்களிலும் அந்தஸ்து பார்ப்பது வழக்கம். ஆனல்இப்போது வயது செல்வம், சமூக அந்தஸ்து, கல்வி வேலை, மதம் ஆகியவை குறித்து கவலைப்படாமல், 'மஞளனே மங்கையின் பாக்கியம்' 'மனைவியே மனிதனின் மாணிக்கம்' என்று நினைத்து, மனமார விரும்பியவரை வரித்துக் கொள்கின்றனர்.

கோடீசுவரனின் குமாரன் சாதாரண 'டைப்பிஸ்ட்' பெண்ணை திருமணம் செய்து கொள்கிருன். மாணவன் விற்பனைப் பணிப்பெண்ணை சந்தித்து காதல் செய்து மணம் புரிகிருன் அரசாங்கத்தில் வேலை செய்யும் பெண், கட்டிடத் தொழிலாளியைத் திருமணம் செய்கின்ருன். இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முந்திய நிலையுடன் ஒப்பிடும்போது இப்போது திருமணமுறை எவ்வளவோ மாறிவிட்டது.

மேல் நாடுகளில் இளம் வயதிலேயே காளையரும் கன்னியரும்மணம் புரிந்து இன்பம் துய்க்க விரும்புகின்றனர். ஆணுக்கு 21 வயதுக்கு குறைவாகவும், பெண்ணுக்கு 19 வயதுக்கு குறைவாகவும் இருந்தால், திருமணம் செய்து கொள்வதற்குப் பெற்ருேர்களின் அனுமதி தேவை. ஆனல் இளம் வயதிலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் நிறைய சம்பாதிப்பதால், பெற்ருேர்களின் அனுமதிக்காகக் காத்திராமல் திருமணம் செய்து கொள்வது பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

மாணவனும் மாணவியும் ஒன்ருகக் கல்வி பயிலும் போது, காதலும் கற்று இறுதியில்கல்யாணம்செய்து கொள்வதும், 50சதவிகிதம் அதிகரித்துவிட்டது. குடும்பச் செலவுக்காக, ஏதேனும் ஓரிடத்தில் பகுதி நேரம் வேலை செய்துகொண்டு, கல்வியும் பயிலுவது என்ருல், சிரமமான காரியம்தான். எனினும் காதலில் கட்டுண்டவர்களை வேறு எந்த சக்தி பிரிக்க முடியும். பலசந்தர்ப்பங்களில் மனைவியே வேலை செய்து சம்பாதித்து கணவனைப் படிக்க வைப்பதோ, அல்லது தொழில்பயிற்சிக்கு அனுப்புவதோ உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்மா அகதிகளுக்குக் கிடைத்ததே இலங்கை அகதிகளுக்கும் கிடைக்கும்

—மனுபாய்ஷா

## பர்மா அகதிகள் பாதையோரத்தில் பசியால் வாடுகிறார்களே!—அண்ணா

பர்மாவிலிருந்து குடிபெயர்ந்து வந்தோரது பற்றி மத்திய சர்க்கார் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை விளக்கிச்சொல்லி போக எங்களால் முடியவில்லை. பர்மாவிலிருந்து வந்தோரிடம் திரட்டி இருக்கக்கூடும்; அவர்களில் பலர் நடைபாதை ஓரக் கடைக்காரர்களாக இருக்கிறார்கள்,

'அவர்கள் வியாபாரம் செய்யத்தேவையான கடனை வழங்கியிருக்கிறோம்; அவர்களது வியாபாரம் அபத்து நிறைந்ததாக—சரிந்துவிடுமோ என்ற அச்சம் நிறைந்ததாக இருப்பதால், அவர்களிடமிருந்து கடன் பாக்கியைத் திரட்டி வசூலிப்பது சுலபமாக இல்லை; இது பற்றி இந்திய அரசுக்கு எழுதினோம். 'எவ்வெப்பொழுது எவ்வளவு தொகை வசூலிக்க இயலுமோ அவ்வளவைக்கு வசூலித்துச் செலுத்திவாருங்கள்—போதும்' என்று மத்திய அரசினர் எழுதியிருக்கின்றனர்; இது, இதமானதோர் தீர்வாகும்.

''பர்மாவிலிருந்து வந்தவர்கள் நம்பிக்கை நிறைந்த மனத்தோடு வந்தார்கள்; தாங்கள் பர்மாவில் விட்டு வந்த சொத்துக்களை மீட்டுத்தர இந்திய அரசினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது அவர்களது நம்பிக்கை; அந்த நம்பிக்கை இப்போது தளர்ந்து, மனம் நொந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் நிலைமை சீரடைய இந்தியா, பர்மிய அரசோடு பேச வேண்டும்; இந்த நடவடிக்கை எடுக்கப்பட மனுபாய்ஷா தம் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்; பர்மியப் பொருளாதாரமும் பாதிக்கப்படாமல், 'தலைக்கு இத்தனை கோடி' என்ற அளவிலாவது காலப்போக்கில் சொத்துக்கள் நம்மவர்க்குத் திரும்பக்கிடைத்திட வகைசெய்யப்பட வேண்டும்.''

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜாஜி மண்டபத்தில், அகதிகள் மறுவாழ்வுத் துறையின் ஐந்தாவது கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் புனர் வாழ்வுத்துறையின் தலைவரும் மத்திய அமைச்சருமான மனுபாய்ஷா பேசுகையில், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும் பர்மாவிலிருந்தும், வந்துள்ள அகதிகளின் மறு வாழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள உதவிகள் அனைத்தும் இலங்கையிலிருந்து வருவோருக்கும் வழங்கப்படுமெனத் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## மலையகத்தில் இயங்கும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இன்று தேசியம் பேசும் இத்தலைவர்களும் அவர்களது குழாமும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு சாதித்ததுதான் என்ன என்பதும் சுடர்மதி படைத்தவர்களைத் தவிர சாதாரண தொழிலாளர்களுக்கு விளங்க நியாயம் இருப்பதாகப் படவில்லை.

### முன்பு நடந்ததென்ன?

நாட்டின் நலனை முன்விட்டு இரு சாராருக்கும் குந்தகம் இல்லாமல் வேதன உயர்வு என்பது சிறு சலுகையென்றாலும் இதற்கு முந்திய வருடங்களில் தேசத்தின் ஏற்றுமதி வர்த்தக நிலைமை நன்றாக விளங்கிய போது என்ன நடந்தது என்பதை யாவரும் அறியவேண்டுவர்.

1953-55ம் ஆண்டுகளில் உயர், மத்தியரக (HIGH MIDDLE GROWN) தேயிலைக்கு ஏல விற்பனையில் கிடைத்த தொகையையும், அதற்கான உற்பத்திச் செலவையும் ஒப்பிடும்போது அன்று ஏன் இத்தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு பெற்றுத் தராமல் வாளாவிருந்தன என்ற ஐயம் யாவர் மனதிலும் எழுவது இயற்கை. மேலும் இன்றைய நிலையிலும் கம்பெனிகள் நிர்வகிக்கும் பெருந்தோட்டங்களில் சராசரி ஏக்கர் ஒன்றிற்கு 1500 இறாத்தல் தேயிலை உற்பத்தியாகின்றது.

ஆண்டிற்கு ஏக்கர் ஒன்றின் சராசரி விளைச்சல் 1500 (X 24 இறாத்தல்கள்).

ஒரு இறாத்தல் தேயிலையின் சராசரி விற்பனை ரூ. 2.50.

உற்பத்தி செலவு (உத்தேசமாக) ரூ. 1.25.

நிகரலாபம் றாத்தல் ஒன்றிற்கு 1.25.

இறாத்தல்ஒன்றிற்கு ஒன்றிலிருந்துசுமார் 1 முதல் 1.25 வரையும் சிலவேளை அதனிலும் இருமடங்கு கூடுதலாகவும் கிடைக்கத்தான் செய்கின்றது. அவ்வளவு தூரம் ஏன்? தொழிற்சங்கத்து தலைவர்களில் பலரும் இன்று சொந்தத் தோட்ட முதலாளிகள்தாம். இவர்களுக்கு இந்த உண்மை நன்கு புரிந்திருந்தும், எந்தக்கண்ணோட்டத்தில் 'தேசிய நன்மையை' அவதானிக்கின்றார்கள் என்பது தான் தெளிவற்று விளங்குகின்றது,

### ஏலம் மூலம் வருமானம்!

தொழிற் சங்கவாதிகள் என்றால் சிறுபான்மையினருக்கென ஒதுக்கப்பெற்ற பார்லிமெண்ட் ஸ்தானத்தில் இரண்டையும் ஒரு ஸ்தாபனமே கவ்விக்கொண்டதெப்படி என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அப்போதைக்கப்போது ஆட்சிக்குவரும் அரசாங்கங்களிடம் தொழிலாளர்களைஏலம் விடுவதின்மூலம் கிடைத்த வருமானம் அல்லவா இது. மேலும் உபரி வருமானமாக செனட்டிலும் ஒரு ஸ்தானத்தைத் தட்டிக் கொண்டனர். சுருங்கச் சொல்லின் தொழிலாளர் பிரதிநிதிகள் யாவருமே 'பேர்பெற்ற' அரசியல்வாதியாகத்தான் திகழ்கின்றனர்.

அரசியலில் ஒருகால், தொழிற்சங்கத்தில் ஒருகால் என்றிருப்பதால் தானே இருவருக்கும் ஒத்துப்பாட வேண்டியுள்ளது? முன்னாள் பிரபல தொழிற்சங்கவாதியொருவர் பல கோரிக்கைகளுக்காக பல நாட்கள் தம்பட்டம் அடித்ததும் இறுதியில் அதன் முடிவு அரசியல் லாபமாக மாறியது போன்றேதான் தோட்டத்தொழிலாளர்களின் பலநாள் ஏன் பலவருட கோரிக்கைகளும் ஒரு சிலரின் அரசியல் பிரவேசத்துடன் முடிவுற்றது.

இன்றைய சூழ் நிலையில் தொழிலாளர்களை அரசியல் சகுனிகளாக்காமல் [illegible] கள்யாவரையும் [illegible] டுப்படுத்தி, சரியான பாதையில் திருப்பி வாழ்க்கையை செம்மைப்படுத்த உண்மை தியாகிகளே தேவை. கபடதாரிகளையும் அரசியல் வேஷதாரிகளையும் சிந்தனா சக்தியுடன் கண்டுபிடிக்கும் திறனை பாட்டாளி வர்க்கம் பெறும்வரை அவர்களின் [illegible] என்று இப்பொழுதே திடமாக ஆருடம் கூறலாம்.

---

## தமிழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி. யின் தொடர்பான கிளர்ச்சியால் கடந்தஆண்டு முதன்முதலாக தமிழில் தொலை பேசிக் கொத்து வெளியிடப்பட்டது தெரிந்ததே. இம் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் முறையில் தமிழ் வணிகர்கள் யாரும் தொலைபேசிக் கொத்துக்கு போதிய விளம்பரம் அளிக்க முன்வரவில்லையென்றும் தமிழர்கள் அதை விலைக்குவாங்கவும் அதிக ஊக்கம் காட்டவில்லையென்றும் அஞ்சற் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந் நிலையில் அடுத்த ஆண்டு தமிழில் தொலைபேசிக் கொத்து வெளியிடும் முயற்சியை கைவிடவும் ஆலோசனை நடை பெறுகிறதாம்.

---

## மறுபிறப்பு...

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

அறைக்கு சென்றான். அங்கு வேறுயாரோ பழக்கமில்லாதவர்கள் இருக்கக் கண்டு திடுக்கிட்டான்.

பெற்றோர்கள் ஆச்சரியமடைந்தனர். பின்னர் விசாரித்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் அவர்களுக்குத் தெரியவந்தன.

(1) சிறுவன் முற்பிறப்பில் தனது தந்தையென உரிமை கொண்டாடிய அந்தோனியோ சாக்கோ அவ்வீட்டில் 1902ம் ஆண்டு பெப்ரவரிக்குப்பின் சில மாதங்கள் இருந்து வீட்டு ஹாவனாவை விட்டு வெளியேறிவிட்டார்.

(2) சாக்கோவின் மனைவி பெயர் அம்பாரோ, அவளுக்கு 3 பிள்ளைகள் பிறந்தனர் அவர்களது பெயர்கள் மெர்சிடைஸ், ஜீன், பஞ்சோ

(3) 1902ம் ஆண்டு பெப்ரவரி மாதக் கடைசியில் இளைய மகனான பஞ்சோ காலமானான். அத்துடன் சாக்கோகுடும்பம் அவ்வூரை விட்டு வெளியேறியது.

(4) அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு அண்மையில் சிறுவன் மருந்து வாங்கியதாகக் கூறிய குறித்த அமெரிக்க மருந்துக்கடை இன்னும் இருந்தது.

### பஞ்சோதான் டுவோர்டோவாக பிறந்தானா?

இப்பொழுது எமது மனதில் எழும் கேள்வி, பஞ்சோதான் டுவோர்டோ என்னும் குறித்த சிறுவனாகப் பிறந்தானா என்பதே. இதற்குப் பதில் கண்டுபிடிப்பது சுலபமோ எளிதோ அல்ல. ஏனெனில் இக்கேள்வி மறுபிறப்பு பற்றிய பிரச்சினையை எழுப்புகிறது.

மறுபிறப்பில் நம்பிக்கையென்றாலும் சரி, நம்பிக்கையீனமும் சரி, தத்துவரீதியாகவோ அன்றி அனுபவ ரீதியாகவோ இருக்கவேண்டும். ஆகவே இப்பிரச்சினையில் சரியான முடிவு எடுப்பதற்காக ஒவ்வொரு சிறிய கோணத்திலிருந்தும் ஆராயப்படவேண்டும்.

இந்துமதம், புத்தமதம், ஜைனமதம் போன்றவை மறுபிறப்பு உண்டென்பதை ஏற்றுக் கொள்கின்றன. இத்தத் தத்துவத்திலுள்ள நம்பிக்கை மிகப்பழைமையானது. மறுபிறப்புப்பற்றி பல்வேறு மதங்கள் கூறுவதைச் சலித்தெடுத்துப்பார்க்கும் போது பின்வரும் கருத்துக்கள் மிதக்கின்றன.

(1) மனித ஆளுமை, உடலுடன் சேர்ந்து அழிந்துவிடுவதில்லை.

(2) மனித ஆளுமையில் 'உயிர்' எனப்படும் ஒன்று இருக்கின்றது. இவ்வுயிர் என்றும் இறப்பதில்லை. இது இறைவனுடன் தொடர்பு கொண்டது.

(3) வாழ்க்கையில் வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், துன்பங்களும் ஏற்படுவதற்கு காரணம், இயற்கையின் தன்மைகளையும், சக்தியையும் உயிர் சரிவர அறிந்து கொள்ளாது தொடர்ந்து தவறு இழைப்பதே.

(4) சீரான ஒழுக்கமான வாழ்வு, தெளிந்த ஞானம், களங்கமற்ற நம்பிக்கை இவற்றாலேயே, உயிர் தனது கட்டுப்பாடுகளை வென்று இறைவனுடன் தனது ஒன்றுபட்ட தன்மையை உணர முடியும்.

சரித்திர பூர்வமாகப் பேசும்போது, மறுபிறப்புக் கொள்கை மிகப்பழைய வேதமாகிய இருக்கு வேதத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. மாந்துவின் காலத்திலிருந்து புராண காலம் கடந்து இற்றைவரை, மறுபிறப்புக் கொள்கை இந்தியாவில் இருந்து வருகிறது.

கியூபா சம்பவத்தின் பின்னர் இக் கொள்கையிலுள்ள நம்பிக்கை இந்தியாவுக்கு மட்டுமுரியதொன்றல்ல என்பது தெரிகிறது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மறுபிறப்பு பற்றி கூறும் 500க்கு அதிகமான சம்பவங்கள் பரவியுள்ளதாக எங்களது பதிவுப்புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

---

## கேட்டதும்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒ. ப. கூ. தாபனத்தாரின் நோக்கமா?

எல்லாம் தமிழில் இருக்கிறது என்று இறுமாப்புப் பேசிக் கொண்டிருந்த இலங்கைத் தமிழரின் கலை இன்னும் இருந்த இடத்திலே தான் இருக்கிறது. ஒன்றுமில்லை என்று ஏங்கியிருந்தவர்கள், மற்றவர்களைப் பார்த்துப் பார்த்துக் கண்ட பாவனையில் கொண்டை முடிந்தவர்கள் இன்று எவ்வளவோ முன்னேறி விட்டார்கள் என்ற உண்மையையும் நாம் ஏற்கத்தான்வேண்டும்.

திறமைசாலிகளுக்கு எப்பவும் ஒரு கர்வம் இருக்கத்தான் செய்யும். அது இல்லையென்றால் அவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பதும் ஓரளவில் உண்மைதான்; ஆனால் கர்வம் பிடித்தவர்கள் எல்லோரும் கலைஞர்களாயிருக்க முடியாது! இ. ஒ. கூ. தாபன பொறுப்பாளருக்கு இருக்கும் பதவி என்ற கர்வத்தில் உண்மையான கலைஞர்களுக்கு அங்கு இடம் கிடைப்பதில்லை. உண்மையான கலைஞர்களை ஒதுக்கி விட்டு 'காக்கா' பிடிக்கும் போலிகளை முன்னுக்கு விட்டால் பாட்டு என்னாகும்? இராகம் என்னவாகும்? தாளம் எங்கே போகும்? எல்லாம் தலை கீழாய்ப் போகும்! திருகுதாளக் கச்சேரியாகும்!

ஆறுமுக நாவலர் இன்றேல் சைவசமய மறுமலர்ச்சியில்லை. செந்தமிழின் நறுமணமும் குன்றியிருக்கும்; உண்மை! கந்த வாரம் முழுவதும் நாவலர் வாசகம் என்ற தலைப்பில் காலையில் ஐந்து நிமிடங்களுக்கு நாவலரை நினைவுகூரக்கூடிய வகையில் ஒலிபரப்பு இருந்தது.

நாவலரைச் சந்திக்க வென்று இருவர் விடியற் காலையே அவர் வீட்டுக்குச் சென்றார்களாம். சூரியோதயத்தின் முன் எழுந்து, மலசலம் கழித்து, பல் துலக்கி, முகம் கழுவி, விபூதி பூசி, கடவுளை வணங்கி... இத்யாதி பல வேலைகளைக் கவனிக்கும் வண்ணம் சைவ வினாவிடையில் எழுதியுள்ள நாவலர் இந்த நேரத்தில் கடவுளைத் தொழுதுகொண்டிருப்பார்; அது முடிய அவரை நாம் சந்தித்து விட்டுத் திரும்பி விடலாம் என்ற நம்பிக்கையோடு அவர்கள் போயிருந்தார்களாம். இவர்கள் அங்கு சென்று ஏழு மணியாகியும் நாவலர் நித்திரை விட்டு எழவில்லை என்று எங்கோ யாரோகுறிப்பிட்டதில் எவ்வளவு உண்மை இருக்குமென நாம் ஆராயத் தேவையில்லை.

செந்தமிழ் நாவலரைப் பற்றி பேசியவர்கள் அத்தனை பேர்களும் ஈனத் தமிழ் பேசி செந்தமிழின் மானத்தைக் கெடுத்து விட்டார்களென்றால் அது ஆறுமுக நாவலரைப் பழித்ததற்கே ஒப்பாகும்!

---

## டட்லியுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் தமிழகத்தில்தான் குடியேற நேரிடும்.

''இந்நிலையில் டில்லியில் இலங்கைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகாவுடன் அண்மையில் மத்திய அரசு பேச்சு நடத்திய போது தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் அழைக்கப்படவில்லை.

''தமிழர் பிரச்சினையை விவாதிக்கும் போது கூடத் தமிழக முதல்வரை தலைமையமைச்சர் அழைக்கவில்லை.

''மாநில அரசை மத்திய அரசு அலட்சியப்படுத்துவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# பசிக்குப் பரிசு

## மு. சிவலிங்கம்

“என்னங்க!... நான் கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறேன் உங்க பாட்டுக்கு எழுதிக் கொண்டே இருக்கிறீர்களே,... என்று கோபத்துடன், தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள் மீனு.

ஏதோ எழுதிக் கொண்டு கற்பனை உலகில் மூழ்கி இருந்த குருபரன், தன் மனைவியின் கோபமான குரலைக் கேட்ட பின்பே... என்ன, என்ன,?... என்று பதற்றத்துடன் கேட்டான்.

வீட்டில் உப்புக் கல்லுக்கும் வழி இல்லை, குழந்தையும், பாலில்லாமல் பசியால் கதறுகிறான், என்னண்டா கேட்கிறீங்க, இந்தச் சீத்துவக் கேட்டுக்குள் எழுத்தோ சோறு போடுது... சினந்தபடி பொரிந்து தள்ளினாள்.

“மீனு! என்னை வேண்டுமானால் திட்டு, என் எழுத்தை மட்டும் பழிக்காதே... என்று கூறியபடி. தான் எழுதிய பேப்பர்களை, ஒழுங்காக அடுக்குவதில் ஈடுபட்டான் குருபரன்...

“உங்களைக் கட்டிக் கொண்டு, இப்படிப் பசியோடு கிடந்து எந்நாளும் சாவதை விட எங்காவது, ஆத்துல, குளத்தில, விழுந்து ஒரே நாளில், செத்துப் போகலாம்,... அவள் கண்கள் கலங்கியது.”

எழுந்து அவள் அருகில் சென்ற குருபரன், மெல்லச் சிரித்துக்கொண்டே... மீனு! நீ என்றாவது, ஒரு நாள் இப்படிச் சொல்லுவாய் என்று எதிர்பார்த்தேன், அதை இன்று சொலிப் போட்டாய், என்னை மணந்து கொண்டால், இன்பத்திற்குப் பதில் துன்பத்தில் தான் சாக வேண்டி வரும்...என்று, நீ, எனைக் காதலித்த போதே சொல்லத்தானே செய்தேன். சேட்டாயா, பட்டாடை உடுத்தி பகட்டு வாழ்வு வாழ்ந்து, பஞ்சு மெத்தையில் புரளுவதற்காக என்னை விரும்பவில்லை, என்னுடைய எழுத்து வன்மைக்காக, அறிவு ஊற்றுக்காக நீ ஒரு தூண்டுகோலாய் இருக்க விரும்பி எனைக் காதலித்தாய். நீயே, உன் வாயால் சொல்லிருக்கிறாய், நூற்றுக் கணக்கான கடிதம் வரைந்தாய். நான் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் என்னையே மணந்து கொண்டாய், இப்போலுது. வேதனைப்பட்டு என்ன செய்வது மீனு, நீயாகத் தேடிக் கொண்ட துன்பந்தானே...” அவன் கண்களில், கண்ணீர் திரை இட்டது; வேதனையோடு கூறினான்.’

‘நமது துன்பத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. நமது சச்சைக் குழந்தையும் பசியால் துடிக்கிறது. குழந்தையைப் பெருமலாவது இருந்தோமா... கூறும் போது. அவன் கண்கள் நீரைக் கக்கியது’

‘நல்லாய்ச் சொன்னாய் மீனு! வயிறு பசிக்கும்போது உணவை முன்னுக்கு வைத்துக்கொண்டு எவனும்பார்த்துக் கொண்டிருப்பானா? அதுவும் என்போன்ற எழுத்தாளனுக்கு பசிக்கிறதுகூட, பதுமாதத்திற்கு ஒரு குழந்தையை பெற்றுக்கொண்டே இருப்பான்.’

‘அத்தான்! நீங்கள் எழுத வேண்டாமென்று கூறவில்லை பொன், பொருள் வேண்டுமென்று, கேட்கவில்லை. நாமும் குழந்தையும் பசி இல்லாமல் சாப்பிடுவதற்காவது ஒரு வேலையைத் தேடிக் கொள்ளுங்கள் என்று தான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

‘அப்ப உன் எண்ணம் நான் சும்மா இருக்கிறேனென்றா? எத்தனையோ இடத்தில், எத்தனையோ மாதிரி வேலைக்கு முயற்சி செய்து விட்டேன், நான் எழுதும் கதைகளிலும், முழுக்க முழுக்க வேலையில்லாப் பிரச்சனைதான், என்னுடைய நண்பர்களெல்லாம் எனக்கு வேலை தேடித் தர எவ்வளவு முயற்சிக்கிறார்கள், நம்மட சனியன் ஒன்றுங் கிடைத்தபாடில்லையே. நானென்னசெய்ய... வேதனையோடு கூறினான். குருபரன், அவன் கண்களிலிருந்து பொல பொலவென்று, கண்ணீர் சிந்தியது.’

கணவனின் கண்களில்கண்ணீரைக் கண்ட மீனு தன் சேலைத்தலைப்பால், அவன் கண்ணீரைத் துடைத்தபடி .. என்னங்க? நீங்களே இப்படி அழுதால் நானென்ன செய்வேன்... என்று கூறி, அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்....

‘என்னுடைய இதயம் மென்மையானது. எந்த எழுத்தாளன் நிலையும் அதே தான். பசியும் வறுமையும் அவனிடந்தான். புலமையும் அவனிடந்தான், இது, என் போன்ற எழுத்தாளனுக்கு ஏற்பட்ட சாபத்திடு’ அவளை அணைத்துக்கொண்டபடி கூறினான் குருபரன்.

அவன் அணைப்பிலிருந்து நழுவிய மீனு, காதில் கிடந்த தோட்டைக் கழற்றி இந்தாங்க, இதைக் கொண்டு போய் ஈடு வைத்துக் குழந்தைக்கு, பால்மாவும் சோத்துக்கு அரிசியும், உங்களுக்கு எழுதுவதற்கு, பேப்பர் இல்லையென்று சொன்னீர்களே, அதையும் வேண்டிக் கொண்டுவாங்க’ என்று கூறி தோட்டைக் கொடுத்தாள்.

தோட்டைக் கையில் வாங்கிக் கொண்டே ‘நீ என்னை மணந்து கொண்டதால் தானே இவ்வளவு துன்பப் படுகிறாய்’ என்றான் குருபரன்.

அதற்கு மேல் அவனைப் பேசவிடாமல் இடைமறித்த மீனு... ‘அப்படி எல்லாம் சொல்லாதீங்க எழுத்துலகம் என்றுவது, நம்மை, உயர்ந்த நிலையில் வாழவைக்குமென்று, நீங்கள் அடிக்கடி சொல்லுவீங்களே, அந்த எண்ணம் நிறைவேறத் தொடர்ந்து எழுதுங்க... நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்...’ என்று கூறினாள்.

அவளை அப்படியே அணைத்துக் கொண்ட குருபரன்... மீனு! உன்னைப் போன்ற மனைவி, எல்லா எழுத்தாளனுக்கும் கிடைப்பதில்லை நான் எத்தனையோ எழுத்தாளர்களைப்பார்த்துவிட்டேன் கலியாணம் முடித்தவுடன், மேல் விலாசமே இல்லாமல் மறைந்து விடுகிறார்கள். நீ எனக்குக்கிடைத்தற்கு நான் பெருமைப்படுகிறேன் என்று கூறி அவள் கன்னத்தை செல்லமாக கிள்ளுக் கிள்ளினான்.

‘சரி சரி விடுங்க, என்ன தான் பசி என்றாலும் இது மட்டும் தவறாது, என்னங்க உங்களுக்கு வயிற்றுப்பசி அடங்கினாலும் இந்தப்பசி அடங்காது போலிருக்கு...” என்று கூறி அவன் பிடியிலிருந்து நழுவிக் கொண்டே, ‘குழந்தை பசியால் அழுது உறங்கிவிட்டான். அவன் எழுந்து விடுவதற்குள் போயிட்டு வாங்க...’

மெல்லச் சிரித்துக் கொண்டே நடந்தான் குருபரன்.

தன் கணவன் செல்வதை தன்பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்ற மீனு, வீட்டிற்குள் சென்று அவன் எழுதி முடித்த ஒரு சிறு கதையை எடுத்து, வாசித்துவிட்டு நெஞ்சோடு அணைத்து ஏதோ இன்பநினைவில் மூழ்கி விட்டாள்.

இவை எல்லாம் நடந்து ஒரு மாதம் ஆகவில்லை. வறுமை இன்னும் அதிகமாக வாட்டத்தொடங்கியது. சொந்தமாக இருந்த அநதத் தோடும் ஈடுவைத்தாகிவிட்டது. ஒரு வேலையும் கிடைத்த பாடில்லை, ஒரு நாளைக்கு ஒரு நேரச் சாப்பாட்டிற்கே வழி இல்லை. இப்பொழுது அவன் கூலி வேலைக்குப்போகத் தொடங்கினான். நாட்டிலுள்ளவர்களுக்கு அவன் எழுத்தாளன். எழுத்து மூலம், எத்தனையோ பேருடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, ஒவ்வொருவர் இதயத்திலும் வாழ்ந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் வாழ்க்கையோ பெருஞ்சுமை.

பகலெல்லாம்விறகு வெட்டவும், ரோடு கொத்தவும், மேசன் மாருடன் கூடி வீடு கட்டவும், யாருக்கேனும் மூட்டை தூக்கிக் கொடுக்க கடைத்தெரு வழியேயும், நாள் தவறாது, வேலை செய்து விட்டு இரவு முழுதும் கண் விழித்து கதை எழுதுவான், இப்படியே பல இரவு கண் விழித்து ஒரு நாவலையே எழுதி, ஒரு பத்திரிகை நடத்திய பரிசுப் போட்டிக்கு அனுப்பியும் விட்டான்.

அவன் இவ்வளவு நாளும் பகலெல்லாம் மாடுபோல உழைத்து, இரவெல்லாம் கண் விழித்து கதை எழுதியதற்கு பலன் கிட்டி விட்டது. அதுதான், எழும்ப இயலாத வருத்தம், படுத்த படுக்கை. மீனுவும், இயன்ற அளவு கடன் உடன் பட்டு வைத்தியம் செய்து விட்டாள் கணவனுக்கு வருத்தம் மாறிய பாடில்லை. அது அவனுக்கு மீளாத வருத்தமாக வந்து விட்டது. மீனுவை விதவையாய் விட்டுச் சென்று விட்டான் குருபரன்.

கணவன் இறந்ததிலிருந்து நடைப்பிணமானாள் மீனு. தினமும் அவன் நினைவால, கண்ணீரில் மிதந்து கொண்டிருந்தாள். ஒரு நேரச் சாப்பாடே அவள் நிம்மதியாகச் சாப்பிடுவதில்லை. அப்படி, எலும்புந் தோலுமாய்மாறி விட்டாள், அவளுக்கு வாழ்க்கையே கசந்து, எத்தனையோ முறை தற்கொலை செய்து கொண்டாலென்ன... என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அப்பொழுதெல்லாம் குழந்தையின் முகத்தைக் கண்டவுடன் அந்த எண்ணத்தையே மறந்து விடுவாள். தன் கணவனை அந்தக் குழந்தையின் உருவில் கண்டாள்.

கணவன் இறந்த பிறகு‘ அந்த வீட்டிலிருக்க விரும்பாதவளாக தன் தாய்வீட்டுக்குப்போக எண்ணி அன்று சாமான்களை எல்லாம், எடுத்துக் கட்டிக் கொண்டிருக்கும் போது, தபால் காரன் வந்து நின்றான்.

‘அம்மா! இதுதானே எழுத்தாளர் குருபரன்வீடு? எங்கேயம்மா அவர் இருக்கிறாரா, அவரைப் பார்க்க ஆசையாய்க் கிடக்கு... என்று கூறியபடி ஒரு பதிவுத்தபாலைக் கொடுத்து விட்டு கையெழுத்து வாங்கிக் கொண்டு நடந்தான் தபால் காரன்.

‘அவர்... அவர்... இல்லை’ என்று வேதனையோடு கூறிய மீனு, அவன் போனபின், அந்தக் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அதில் குருபரன் எழுதிய ‘அன்பு மனம்’ என்ற நாவல் முதலிடம் பெற்றிருப்பதாகவும், அதன் பரிசுத் தொகை இரண்டாயிரம் ரூபாயும் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருப்பதைப் கண்டவுடன், அப்படியே சிலையாக நின்றாள். கண்ணீர், கண்களில் முட்டி நின்றது.

‘அத்தான்! எழுத்துலகம், என்றுவது நம்மை வாழவைக்குமென்று சொன்னீர்கள், நீங்கள் சொன்ன படியே நடந்து விட்டது. ஆனால் இந்த மகிழ்ச்சியை அனுபவிக்கநீங்கள் இல்லையே அத்தான்! இதோ நீங்கள் எழுதிய நாவல் முதலிடம் பெற்று இரண்டாயிரம் ரூபாய் பரிசுடன் பிரசுரமாகப் போகுது அத்தான் பிரசுரமாகப் போகுது” என்று கூறியபடி அவ்விடத்திலேயே அமர்ந்து ஓவென்றழுதாள் மீனு.

அவளின் சின்னக்குழந்தை தவழ்ந்து வந்து அவள் மடியில் அமர்ந்து கொண்டு தாயின் கண்ணீரைக் கண்டோ என்னவோ, அவள் கன்னத்தில் கையை வைத்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சிரித்துக் கொண்டது. அதன் சிரிப்பு தானும் அப்பாவைப் போல் எழுத்தாளன் ஆகப் போகிறேன் எற்று கூறுவது போலிருந்தது.

அப்படியே குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டாள் மீனு. அவள் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் அந்தக் கடிதத்தில பட்டு நனைத்துக் கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

---

(3-ம் பக்கத் தொடர்)

காசி ஆனந்தனின் கவிதைகள் என்றால் அது பதிப்பகத்தாரின் துணிவு மிக்க செயல்

ஒவ்வொரு தமிழனும் தமிழன் கனவை விலை கொடுத்து (ஓசியில் அல்ல) வாங்கிப் படிககத் தவறிவிட மாட்டான் என நம்புகிறோம்

சாதாரண உயிர் பெற்ற கவிதைத் தொகுதி இது.

[illegible]

---

# தேடுகிறேன்

புரட்சிபாலன்

வீடு ஒன்று தேடுகிறேன்—கொழும்பில்
வீடு ஒன்று தேடுகிறேன்

வாடும் மனையாள் துயரம் நீக்கி
வாழ்ந்து இனிதாய் குடும்பம் நடாத்தி
சாடும் சுற்றார் கவலைகள் போக்க
சங்கரன் போலொரு புதல்வனைப் பெறவே

வீடு ஒன்று தேடுகிறேன்—கொழும்பில்
வீடு ஒன்று தேடுகிறேன்

மச்சான் அவளை மணந்தே நானும்
மாசம் பத்தும் முடிந்து போச்சே
இச்சை அடக்கி இந்தக் கொழும்பில்
இனியும் வாழ முடியா ததனால்..!

வீடு ஒன்று தேடுகிறேன்—கொழும்பில்
வீடு ஒன்று தேடுகிறேன்

ஹொட்டல் உணவால் வாந்திபேதி
கொசுக்கடி தன்னால் நாளொருவியாதி
தட்டிக் கேட்க ஆளில்லை என்றே
தவறணை செல்லும் என்னை அடக்க

வீடு ஒன்று தேடுகிறேன்—கொழும்பில்
வீடு ஒன்று தேடுகிறேன்

உச்சி வெயிலும் உருகித் தலைமேல்
உறைந்த போதும் அயர்வு இன்றி
துச்ச மெனவே பணத்தையு மெண்ணி
துடியிடை யாளுடன் வாழவே நண்ணி

வீடு ஒன்று தேடுகிறேன்—கொழும்பில்
வீடு ஒன்று தேடுகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆடை குறைப்பு செய்ய மறுத்தேன் அதனல் பல 'சான்சுகளை' இழந்தேன்"

## குமாரி பாரதி அளித்த சுவையான பேட்டி



மலர்கள் மலர்ந்து மணம் வீசும் பூந்தோட்டம். அங்கே பாரதியும், சிவகுமாரும சந்தித்தார்கள். இருவர் உள்ளத்திலும் காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இனிய காதல் பாட்டு பாடி உல்லாசம் கண்டார்கள்.

இது கடந்த மாதம் 29-ந் தேதி திரைக்கு வந்த ''உயர்ந்த மனிதன்'' என்ற படத்துக்காக ஏ. வி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் படம் ஆக்கப்பட்ட காட்சி.

காதல் காட்சியில் நடித்துவிட்டு முத்துப்போல் நெற்றியில்துளிர்த்த வியர்வையை துடைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார் பாரதி. சுவையான பேட்டி தொடங்கியது.

### உணர்ச்சி வருமா?

நிருபர்: காதல் காட்சியில் நடிக்கும் போது உணர்ச்சி ஏற்படுகிறதோ!

பாரதி: அய்யய்யோ...... உணர்ச்சியா! வெறும் நடிப்பு என்று நினைத்துக் கொண்டு நடிக்கும் போது அங்கே உணர்ச்சிக்கு இடம் ஏது? டைரக்டர் (கிருஷ்ணன்) பஞ்சு சார் சொல்லிக் கொடுத்தார். அதன்படி நடித்தேன்.

### கூச்சம் இல்லை

நிருபர்: காதல் ஜோடியாக நடிப்பவர் கட்டிப் பிடித்து நடித்தால் கூச்சமாவது உண்டாகுமா?

பாரதி:—அச்சம், கூச்சம், வெட்கம் கொண்டால் நடிப்பேவராது. புது நடிகைகளுக்கு வேண்டுமானல் இவை வரலாம். நான்தான் பலபடங்களில் நடித்து பழகிவிட்டேனே! தைரியமாக நடிப்பேன். நடிபுப் பற்றி யாரும் குறை கூறக்கூடாது என்று கவனமாக நடிப்பேன்.

நிருபர்: இளம் நடிகையான நீங்கள் 'கவர்ச்சி' காட்டி நடிக்க விரும்புவது உண்டா?

### வயிறு தெரியும் உடை

பாரதி: மார்புக் கச்சையும் வயிறு தெரியும் உடையும் அணிந்து நடிப்பதை ''கவர்ச்சி'' என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

நிருபர்: அப்படி என்றல் நீச்சல் உடையில் தோன்றுவதுதான் ''கவர்ச்சி''யா?

பாரதி: இந்த ஆடையைக் குறைத்து உடலைக் காட்டுவது ''போலி'' கவர்ச்சி ஆகும். அது படம் பார்ப்பவர்களை உணர்ச்சி கொள்ள தூண்டலாம்.

ஆனல் உண்மையான ரசிபுத்தன்மையை தூண்டாது! அதனல் இவை எயல்லாம எனக்குப்பிடிக்காது.

### சேலையே தேவை

நிருபர்: வேறு எதுதான் பிடிக்கும்.

பாரதி: அழகாக சேலை உடுத்துவதே பெண்களுக்கு ''கவர்ச்சி'' நான் ஆடைக் குறைப்பு மோகம் கொண்ட நடிகையாக இருந்தால் எத்தனையோ பட 'சான்ஸ்' களை உதறி இருப்பேனு!

நிருபர்: ஆபாச உடை அணிய மறுத்து இருக்கிறீர்களா?

### பணமா? பெயரா?

பாரதி: சில கன்னட, தெலுங்கு படங்களில் கூட கொஞ்சம் ஆடைக்குறைப்புடன் நடிக்க அழைத்தார்கள். நான் வேண்டாம் என்று மறுத்துவிட்டேன்.

நடிக்க ஒப்புக்கொண்டால் நிறைய பணம் கிடைக்கலாம். பெயர் கிடைக்காதே. முதலில் எனது தோழிகளுக்கே என்னல் பதில் சொல்ல முடியாதே.

### கட்டுக்கதை

நிருபர்: நீங்கள் யாரோ ஒரு இந்தி நடிகரை......

பாரதி: நானே அதுபற்றி விளக்கமாக சொல்லி விடுகிறேன். ''சாது அவர் சைத்தான்'' என்ற இந்திப் படத்தில் நான் கதாநாயகியாக நடிக்கிறேன். அந்தப் படமும் வெளிவரப்போகிறது. நான் அதில் நடித்ததை வைத்து 'கதை' கட்டி விட்டார்கள்.

நடிகைகள் மீது சிலர் இப்படி புரளிகளை கிளப்பி விடுவதுகண்டு வருந்துகிறேன். நடிகைகளும் பெண்கள்தானே. இப்படிப் புரளி கிளப்பினல் அவாகள வேதனை அடைவார்களே. இதை ஏனே சிலர் புரிந்து கொள்வது இல்லை.

### குடும்பப் பெண்

நிருபர்: நீங்கள் மிகவும் விரும்பி ஏற்று நடிக்கும் வேடம் எது?

பாரதி: குடும்பப் பெண் வேடம் ஏற்று நடிக்கவே விரும்புகிறேன். குடும்பப் பெண்ணிடம் அடக்கம், ஒடுககம், அன்பு, பாசம், தாய்மை உணர்ச்சி எல்லாமே அடங்கிக் கிடக்கும். இவைகளை வெளிப்படுத்தி நடிக்கவே விரும்புகிறேன்.

நிருபர்: நீங்கள் தமிழ் வசனத்தை சரளமாகப பேசினல் இன்னும் 'ஓகோ' என்று பெயர் எடுக்கலாம் அல்லவா?

பாரதி: இந்தக் குறை நான் சினிமா உலகில் புகுந்த போது கொஞ்சம் இருந்து இருககலாம். இப்போது அது முழுவதும் நீங்கி விட்டது.

நான் தமிழ் படங்களில் நடிக்க வேண்டும் என்பதற்காக மொழிப்பயிற்சி பெற்றவள் அல்ல. சிறுமியாக இருக்கும் போதும், கல்லூரியில் படிக்கும் போதும தமிழில் நன்ருக பேசக் கூடியவளே. அதனல் சரளமாக வசனம் பேசுவது எனக்கு ஒன்றும் கஷ்டமானது அல்ல.


### நடிகைகளின் வாழ்க்கை

நிருபர்: நடிகைகளின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்.

பாரதி: அதிக ஆடம்பரம் இல்லாமல் வாழ்க்கை நடத்தவே நான் விரும்புகிறேன். படப்பிடிப்பில் கலந்து கொள்ளும்போது நடிகையாகவும் வீட்டில் இருக்கும் போது குடும்பத்தில் ஒருத்தியாகவும் நடந்துகொள்வேன்.

கூந்தலில் உள்ள மல்லிகை மலர் ஒன்றை எடுத்து நுகர்ந்து கொண்டு இருக்கும போது 'டேக்... ரெடி' என்று குரல் கொடுத்தார் டைரக்டர் பஞ்சு.

சிட்டாகப் பறந்து படப்பிடிப்பு 'செட்'டுக்குள் நுழைந்துவிட்டார், பாரதி.



திரை விமர்சனம்:

## நீல வானம்

நீலவானம் திரைப் படமும் ஏனைய சாதாரண திரைப்படங்களைப் போலத்தானே முடிவடையப் போகிறது என்று எண்ணிக் கொண்டு இந்தப் படத்துக்குப் போனல் நிச்சயம் ஏமாற வேண்டியதுதான். ஆம், இப்படத்தின் முடிவு, கல்யாணத்தில் மங்களகரமாக முடிவடையும் ஏனைய சாதாரண தமிழ்ப்படங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அதுவே இப்படத்தின் தனிச் சிறப்பு.

கதாநாயகனை நடிக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பைப்பற்றி புகழ்ச்சியுரை தேவையில்லை. மீன் குட்டி நீந்துவதில் ஏது ஆச்சரியம்? ஆனல் புற்றுநோயாளியாக நடித்திருக்கும் தேவிகாவை நிச்சயம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

தனக்குப் பயங்கர நோயென்பதையும் சிலமாதங்களே உயிருடன் இருக்கப் போகிறேமென்பதையும் தெரிந்து கொள்ளாமல் சின்னக் குழந்தைபோல ஆசைக் கோட்டைகளை தேவிகா வளர்க்கும்போது படம் பார்க்கிறேமென்பதையும் மறந்து நாமே பச்சாத்தாபப்படுகிறேம்அவ்வளவு. அற்புதமான நடிப்பு.

நெஞ்சில் ஓர் ஆலயத்தின்பின் தேவிகா நடித்துள்ள படம் நீலவானம் என்று சொல்லலாம்.

நாகேஷ் — வி. கே. ராமசாமியின் ஹாஸ்யம் எடுபடவில்லை. இரண்டொரு பாடல்கள் இனிமையாக இருக்கின்றன.

ராஜஸ்ரீயுடன் சிவாஜி ஆடும் காதல் கூத்துக்களைக் கொண்ட ஆரம்பக் காட்சிகளை தவிர்த்திருக்கலாம். நல்ல நடிப்புக்காகப் பார்க்க வேண்டியபடம் நீலவானம்.

—மகேஸ்

## அடிமைப் பெண் படப்பிடிப்பில் ஜெயலலிதா காயமடைந்தார்

எம். ஜி. ஆர். பிக்சர்சார் ''அடிமைப் பெண்'' என்ற படதலை கலரில் உருவாக்கி வருகிருர்கள் அல்லவா!

இந்த படத்துக்கு ஆன வெளிப்புறக் காட்சிகள் செங்கல்பட்டு பக்கத்தில் படம் ஆக்கப்பட்டன.

மன்னனே கொடியவன். அவனது கொடுமை தாங்க முடியாமல் நெருபபில் விழுந்த புழுப்போல மக்கள் துடித்தார்கள்;

சிந்தும் கண்ணீரோடு கூட்டம் கூட்டமாக ஊரை விட்டேவெளியேறி போனுர்கள். மலைச்சரிவில் நின்று மக்கள் போவதை பார்த்துக் கொண்டிருந்த எம். ஜி. ஆரின் உள்ளம் கொதித்தது. விழிகளில் கண்ணீர் ஓட வெளியேறும் மக்களுக்கு ஆறுதல் கூற காதலி ஜெயலலிதாவையும்அழைத்துக்கொண்டு ஓடிவந்தார்;

இப்படி ஓடி வந்த காட்சி ஒரு மலைச்சரிவில் படமாக்கப்பட்டது. மலைச்சரிவில் ஜெயலலிதாவின் [illegible] பிடித்து இழுத்துக்கொண்டு எம். ஜி. ஆர். ஓடிவந்தார்.

அப்போது ஜெயலலிதாவின் கால் இடறி கல்லில் அடிபட்டது. அதனல் காலில் காயம் பட்டு ரத்தம் கசிந்தது.

உடனே சிகிச்சை அளிக்கப்பட்டு மீண்டும் படப்பிடிப்பு தொடர்ந்து நடந்தது.

கே. சங்கர் டைரக்ஷனில் [illegible] இந்தப்படத்தின் [illegible] வேகமாக நடக்கிறது.

## பேபி பத்மினி



கே.வி. மகாதேவன் இசை அமைக்க சொர்ணம் வசனம் எழுதுகிருர்;

பேபி பத்மினி ஆரம்ப வகுப்பில் சென்னையிலுள்ள ''ஹோலிஏஞ்சல்ஸ்'' கொன்வென்டில் படித்துக்கொண்டிருந்தபோது முதல் படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. கான்வென்ட் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுச் சினிமாப் படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டாள் இந்தக் குட்டி நடிகை. இவள் இதுவரையில் தமிழிலும்தெலுங்கிலும் சுமார் இருபத்தைந்து படங்களில் நடித்துவிட்டாள். படங்களில் நடிப்பதால் பள்ளிக்கு போக முடியவில்லையே என்று டியூசன் வாத்தியாரிடம் இவள் வீட்டிலேயே தினமும் படிக்கிருள். ஸ்டுடியோவில் ஷூட்டிங் நடக்கும்போது கொஞ்சம் இடைவேளை கிடைத்தால் அந்த நேரத்தில் இவள் தன் பாடங்களைப் படிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் 21ந் திகதி முதல் குதூகல ஆரம்பம்!!

மகத்தான 'ரம்ழான்' நத்தார்' திரைவிருந்து!



சென்ரல் (மருதானை) நவா (கொம்பனிவீதி) ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை) லிபர்ட்டி (ஹட்டன்)
றெக்ஸ் (பதுளை) ஆனந்தா (கம்பளை) —மற்றும் திரைகளில்

நடிகர் திலகம் ★ சிவாஜிகணேசன் ★ பி. சரோஜாதேவி ★ நாகேஷ்
★ பாலாஜி ★ சுந்தரராஜன் ★ வி. கே. ராமசாமி ★ சுந்தரிபாய் ★ ராஜசுலோசனா
மற்றும் பலர் நடித்த
சுஜாத்தாவின்

## என் தம்பி

டைரக்ஷன்: ஏ. ஸி. திரிலோகச்சந்தர் M.A. இசை: எம். எஸ். விஸ்வநாதன்


கடைசி வாரம்! சென்ரல் (மருதானை) மற்றும் திரைகளில்
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா —மற்றும் பலர் நடித்த

## தேர்த் திருவிழா

## இப்பொழுது காட்சியளிக்கிறது!


செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) ஈரோஸ் (பாமன்கடை)
வின்சர் (யாழ்ப்பாணம்) அசோகா (புத்தளம்)

* எம். ஜி. ஆர். * ஜெயலலிதா * நம்பியார்
* அசோகன் * நிர்மலா
மற்றும் பலர் நடித்த



## ரகசியப் பொலீஸ் 115

## 5வது வெற்றிவாரம்
கெப்பிட்டல் (கொழும்பு)




## 2-வதுவாரமாககாட்சிதருகிறது!

இம்பீரியல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி)

சிவாஜி கணேசன்,
தேவிகா,
சகஸ்ரநாமம்,
ராஜஸ்ரீ, நாகேஷ்,
வி. கே. ராமசாமி
—நடிக்கும்—



## நீலவானம்

இசை; எம். எஸ். விஸ்வநாதன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1968-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org